
உ

சிவமயம்



# இந்து இளைஞன்

## இலங்கை இந்து இளைஞர் பேரவையின்

### 12வது தேசிய இந்து இளைஞர் மாநாடு

# சிறப்பு மலர்

1998-04-18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

# இந்து இளைஞன்

## இலங்கை இந்து இளைஞர் பேரவையின்

### 12வது தேசிய இந்து இளைஞர் மாநாட்டு

## சிறப்பு மலர்

1998~04~18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிள்ளையார் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## வாழ்த்து

வாழி இலங்கை வளர்க அறநெறிகள்
வாழி ஈழ இந்து இளைஞர் பேரவை வாழியவே
அன்பரெல்லாம் கூடி அரிய தொண்டாற்றி
இன்புடனே வாழி இனிது

(அருள் மொழியரசு கிருபானந்தவாரியார் சுவாமிகள் இந்து இளைஞர் பேரவையின் பத்தாவது தேசிய மாநாட்டை முன்னிட்டு அனுப்பிவைத்த வாழ்த்துப் பாடல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மலரில்............


- ஆசிச் செய்தி ~ 01
- வாழ்த்துச் செய்தி ~ 02
- அருளாசிச் செய்தி ~ 03
- ஆசிச் செய்தி ~ 04
- வாழ்த்துச் செய்தி ~ 05
- தலைவரின் ஆசிச்செய்தி ~ 06
- இ.இ.இ.பேரவையின் வரலாற்றுச் சுருக்கம் ~ 08
- தலைமைச் செயலாளரின் பேனாவிலிருந்து ~ 12
- இ.இ.இ.பே.நடப்பு வருட நிர்வாகிகள் ~ 16
- சீர்காழிப் பிள்ளையும் திருவாமூர் அப்பரும்.. ~ 17
- சைவ மக்களும் தெய்வத் தொண்டும் ~ 27
- ஒத்துழைமின் ~ 30
- இந்து மதமும் இந்து இளைஞர்களின் பங்களிப்பும் ~ 32
- மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் ~ 35
- இந்து சமயம் காட்டும் வாழும் வழி ~ 38
- இலங்கையில் இந்து சமய வழிபாடு ~ 43
- எங்கும் நிறைந்த.. ~ 51
- இந்து இளைஞர் மன்றங்களின் பணிகள்
- யாழ்ப்பாண மாவட்டம் ~ 59
- திருக்கோணமலை மாவட்டம் ~ 60
- மட்டக்களப்பு மாவட்டம் ~ 63
- அம்பாறை மாவட்டம் ~ 66
- ஏனைய மாவட்டங்கள் ~ 68
- நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்களின்

# ஆசிச் செய்தி

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்
நெ.1, சாலை தெரு, காஞ்சிபுரம் - 631502

பாடல் பெற்ற தேவாரத் திருத்தலங்களுள் நல்குவது திருக்கோணமலை. ஸ்ரீலங்கா - கொழும்பு நகரில் அமைந்து இளைஞர்கள் உள்ளங்களில் ஆன்மீக எண்ணங்களை விதைத்தும் வளர்த்தும் ஸ்ரீ பரமேஸ்வரனுக்கு பரமப்ரீதியளிக்கும் பரோபகாரப் பணிகளில் ஈடுபடச் செய்தும் வருவது இலங்கை இந்து இளைஞர் பேரவை. இதன் பன்னிரெண்டாவது மகாநாடு திருக்கோணமலை தெய்வத் திருத்தலத்தில் வரும் சித்திரை 18, 19ம் திகதிகளில் நடைபெறுவதையும் அறிந்து மகிழ்கின்றோம். மகாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறவும் இதனையொட்டி வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலர் ஆன்மீகம் ஒன்றே தனிநபர் வாழ்வை நல்வழியில் அமைய வைத்து சமுதாய வாழ்வை அதன் அடிப்படையில் ஒளிர வைக்கும் என்ற உண்மையை விளக்கவும் எல்லாம் வல்ல இறையருள் கூட ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பன்னிரெண்டாவது தேசிய இந்து இளைஞர் மாநாடு எதிர்வரும் சித்திரை மாதம் 18, 19ம் திகதிகளில் திருக்கோணமலையில் நடைபெற இருப்பதாக அறிகின்றோம்.

மாநாடு சிறப்புடன் நடந்தேற வாழ்த்துகின்றோம்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பணிகள் ஓங்கவும் இந்து இளைஞர்கள் உத்வேகம் பெற்று சமுதாயப் பணிகளில் இன்னும் கூடுதலாகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும் வாழ்த்துகின்றோம்.

**இறைபணியில்**

சுவாமி ஆத்மகனாநந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்

# அருளாசிச் செய்தி

**தொண்டுசீர் பெருந்தகையீர்!**

**இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 12வது தேசிய இந்து இளைஞர் மகாநாடு திருக்கோணமலையில் நடப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இளைய தலைமுறையினரை தொண்டு செய்யும் மனப்பான்மையுடன், இறைவன் மேல் நம்பிக்கையும் கொள்ளக் கூடிய வகையில் இந்து இளைஞர் பேரவை இலங்கை சைவ இளைஞர் சமுதாயத்துக்கு இன்னோரன்ன பணிகளை ஆற்றுவது அனைவருக்கும் மன மகிழ்ச்சியைத் தருகின்றது. விஞ்ஞானம் வளர்ந்து வரும் இக்காலத்தில் சமய நம்பிக்கை என்பது கேள்விக்கிடமாகவே உள்ளது. மகாநாட்டில் இளைஞர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு கொடுக்க வேண்டிய போதனைகளை நல்ல முறைப்படுத்தி நல்லதொரு சமுதாயத்தையும் கட்டியெழுப்ப இம்மகாநாடு செயற்படட்டும். இம் மகாநாட்டில் வெளியிடப்படும் சிறப்பு மலரும் பயனுள்ளதாக அமையவும் எல்லோருக்கும் இறைவனின் நல்லாசிகள் கிடைக்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.**

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

இரண்டாவது குரு மஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய
பிரதம குருவும் ஆதின கர்த்தாவுமான
*"வேதாகமமாமணி"*

## சோ.இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களின்

# ஆசிச் செய்தி

**தேவாரப் பாடல் பெற்ற புண்ணிய பூமியான திருக்கோணமலையில் தலைமைச் செயலகத்தை அமைத்துள்ள இலங்கை இந்து இளைஞர் பேரவையினரின் பணிகள் சிறக்க வாழ்த்துவதோடு, இப்பேரவையின் பன்னிரெண்டாவது தேசிய இந்து இளைஞர் மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு எனது ஆசியினை அன்புடன் தெரியத்தருவதோடு எல்லாம் வல்ல கோணமாமலைப் பெருமானும், அன்னை பத்திரகாளி அம்பாளும் இப்பேரவையினரை ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.**

*"வேதாகமமாமணி"*
**சோ.இரவிச்சந்திரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

இலங்கை இந்து இளைஞர் பேரவை 12வது தேசிய மகாநாட்டு நிகழ்வை சிறப்பாக நடாத்தவிருப்பதையறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இளைஞர்களிடையே ஆன்மீக சிந்தனைகளை பரப்புவதும் அவர்களது எழுச்சிக்காக நிறைவான பணியாற்றுவதும் யாவரும் அறிந்த ஒன்று. அண்மைக் காலத்தில் எமது நாட்டில் அவ்வப்போது நிகழும் விரும்பத்தகாத விளைவுகளால் மக்கள் பலவாறும் அல்லலுற்றும் அங்கும் இங்கும் அலைந்து அச்சத்துடனும் ஏக்கத்துடனும் வாழுகின்ற போது இந்து இளைஞர் பேரவை மக்களின் நிலையைப் புரிந்து கொண்டு சமயப் பணியோடு சமூகப் பணியும் எமது இனத்திற்கு அத்தியாவசியம் தேவைப்படும் கல்விப் பணியையும் ஆற்றி வருவது எல்லோராலும் விரும்பப்படுவதாகவும் வரவேற்கப்படுவதாகவும் இருப்பதை அறிய முடிகின்றது.

மக்களின் உடனடித் தேவைகளை இனம் கண்டு அவை நிறைவேற ஆவன செய்வதும், நீண்ட வாழ்க்கையில் நிலைத்த இன்பம் பெற வழிகாட்டுவதும் இந்து இளைஞர் பேரவையின் செயற்பாடாக மாறியுள்ளதை உணர முடிகின்றது.

இனிவரும் காலங்களிலும் இந்து இளைஞர் பேரவை மிகுந்த உற்சாகத்துடன் செயற்பட்டு எமது மக்களிடையே எல்லா வகையிலும் எழுச்சியான சிந்தனைகளையும் விழிப்புணர்ச்சியையும் ஊட்டி மக்கள் அனைவரையும் மகிழ்விலும் மனநிறைவிலும் திகழவும் வைக்க அமைப்பை வாழ்த்துவதோடு இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

எஸ்.தில்லை நடராஜா
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# இலங்கை இந்து இளைஞர் பேரவை தலைவரின் ஆசிச் செய்தி

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 12வது மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

இப்பேரவை 1970ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பமானது. சமய, சமூகப் பணிகள் பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் தான் செய்யப்படவேண்டியுள்ளது. மிகக் குறைவான எண்ணிக்கையுடன் செயற்பட்ட பேரவை இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் மாவட்டப் பேரவைகளை நிறுவிச் செயற்படல் வேண்டுமென்ற முடிவினைத் தொடர்ந்து முதல் செயற்படத் தொடங்கியதும் இன்று முன்னணியில் திகழ்வதும் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையே. இதற்கு அன்றும் இன்றும் உறுதுணையாக நின்று அரும்பாடுபட்டு செயற்படுத்துபவர் "சிவஞானச் செல்வர்" திரு.செ.சிவபாதசுந்தரம் அவர்களே, அன்னார் தம் பணி போற்றத்தக்கது.

இத்தகைய பெருந்தகையாளரே, இறைவன் செயலால் இடிந்து வீழ்ந்த இலங்கை இந்து இளைஞர் பேரவையை தன்னந்தனியாக தலைகொடுத்து தலைநகரிலிருந்து திருக்கோணமலைக்குக் கொண்டு வந்து அதன் தலைமைச் செயலகத்தை திருக்கோணமலை மாவட்ட பேரவையின் நிதி உதவியோடு செயற்படுத்தினார்.

இன்று 200க்கு மேற்பட்ட இந்து இளைஞர் மன்றங்களையும் 10க்கு மேற்பட்ட மாவட்டப் பேரவைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இப்பேரவை இன்று இடம், பொருள், ஏவல் போன்ற இன்னோரன்ன இடர்ப்பாடுகளை எதிர்கொண்டுள்ளது.

நாமார்க்கும் குடியில்லை நமனை அஞ்சோம் என்ற பழமொழிக்கு இணங்க பேரவை பணிபுரிவது போற்றத்தக்கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து இளைஞர்கள் சமயப் பணியுடன் திருப்தி காண்பது போதுமானதல்ல, தற்போதைய நமது சமூக சமய முன்னேற்றத்தைக் காண வேண்டுமாயின் சீரிய பொருளாதார முன்னேற்றத்தில் நிலைக்க ஆக்கபூர்வமான செயலில் இறங்க வேண்டும்.

பொருளாதாரம், கல்வி, அரசியல், பண்பாடு, சமயம் ஆகியவற்றில் மிக்க நலிவுடன் விளங்கும் நமது சமூகத்தின் மேன்மைக்கான பணிகளில் தீவிரமாக செயற்பட வேண்டிய கட்டாயம் இப்பேரவைக்கு ஏற்பட்டிருக்கிறது.

சமூகச் சீர்கேடு, இன்ப இடர்பாடு, சாதி பேதச் சாபக்கேடு போன்ற சாக்கடைப் புற்றுநோய்களைப் புறம் தள்ளிப் புதுப் பொலிவுடன் இந்துக்கள் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்ட வேண்டும்.

இன்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் இந்து ஆலயங்கள் இடிபாடுகளுடன் காட்சி தருகின்றன. வழிபட்ட மக்கள் வனாந்தரத்திலும், சொந்த நாட்டில் துயர் உற்றும், அந்நிய நாட்டில் அடைக்கலம் தேடியும், ஆருமற்ற அனாதைகளாக அனாதை இல்லங்களிலும் சொல்லொணாத் துயர் உற்று சோக வாழ்வு வாழ்கின்றனர்.

இந்த வேதனைச் சூழலில் ஏதோ சில சமய விழாக்களுடன் திருப்தி காணக் கூடாது. மக்கள் சேவையே மகேசன் சேவை மக்கள் மனமகிழ்ச்சியே, சமயப் பணியின் மகோன்னத இலட்சியமாக மலர வேண்டும்.

மாண்புறு சமயப் பணியாற்றும் இலங்கை இந்து இளைஞர் பேரவை சீர் பெற்றோங்கிச் சிறப்பான பணியாற்ற எல்லாம் வல்ல கோணநாதப் பெருமான் திருவருள் வேண்டுகிறேன்.

"வாழ்க இலங்கை இந்து இளைஞர் பேரவை.
வளர்க அவர்தம் பணி."
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

மயூரம்
சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு 1,
கல்முனை.

வ.முருகப்பன்
தலைவர்,
இலங்கை இந்து இளைஞர் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வரலாற்றுச் சுருக்கம்

இலங்கை எங்கும் பல்வேறு கிராமங்களில் இந்து இளைஞர் மன்றங்கள் இயங்கி வந்தன. இவற்றுட் சில நீண்ட காலங்களாக இயங்குவன. வேறு சில குறுகிய கால எல்லையிற் தொடங்கப்பெற்றன. தனித்தனி இயங்கிய இவற்றை ஓரணிக்குட் கொண்டுவரப் பல காலமாக முயற்சிக்கப்பட்டது. போதிய ஒத்துழைப்பின்மையால் அவ்வெண்ணங் கைகூடாது போய்விட்டது.

கொழும்பில் 1952ம் ஆண்டு முதல் இயங்கி வந்த இந்து வாலிபர் சங்கம் இந்த முயற்சியில் தோல்வி கண்ட பின்னர் தன்னைத் தானே அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமென 1967ம் ஆண்டு மாற்றிக் கொண்டது. அதனை அச்சங்கம் அப்பெயரிற் பதிவு செய்துமுள்ளது. இது ஒரு முறையான நாடு தழுவிய அமைப்பேயல்ல என்பதை அதன் நிருவாகிகள் நன்குணர்ந்திருந்தனர். அதன் முடிவாக 1970ம் ஆண்டு மாசி மாதம் தேசிய மட்ட இந்து இளைஞர் இயக்கமொன்றை அமைக்குந் தொடக்கக் கூட்டத்தை ஒழுங்கு செய்தனர். கொழும்பு இராமக்கிருஷ்ண சங்க மண்டபத்தில் கூட்டப்பட்ட இத்தொடக்கக் கூட்டத்திற் கலந்து கொள்ள அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமென்ற கொழும்பு இந்து வாலிபர் சங்கம், நீர்கொழும்பு, மட்டக்களப்பு, குருக்கள்மடம், மூதூர் உள்ளிட்ட 11 இந்து இளைஞர் மன்றங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தன.

மூன்று நாள் நடந்த இவ்வாரம்பக் கூட்டத்திலே "இலங்கை இந்து இளைஞர் பேரவை" என்ற அமைப்பை ஏற்படுத்துவதெனத் தீர்மானித்து அதற்குரிய யாப்பும் உருவாக்கி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது ஓர் அகண்ட இயக்கமாக வளர வேண்டுமென எதிர்பார்த்த அன்றைய அமைப்பு மிகச் சொற்பமான ஆட்சிக்குழவை அமைத்ததோடு இரண்டாண்டுக்கொரு முறை ஆண்டு மாநாட்டினை நடத்துவதெனவுந் தீர்மானித்தது.

இது ஒரு புத்துணர்வை இந்து இளைஞர் மன்றங்களிடையே உண்டாக்கிவிட்டது. இதனால் வளர்ச்சியுற்ற இப்பேரவை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் 71 இந்து இளைஞர் மன்றங்களை உள்ளடக்கிய ஓர் இயக்கமாக வளர்ந்தது. மன்றப் பிரதிநிதிகள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் ஓரிடத்திற் கூடும் பொழுது பங்குபற்றும் உறுப்பினர்களின் போக்குவரத்துக் கட்டணங்கள் பேரவையினாலேயோ, உரிய மன்றங்களினாலேயோ வழங்கப்படக் கூடிய நிலை ஏற்படவில்லை. இந்நிலையிற் கூட்டங்களுக்கு பங்குபற்றும் ஆர்வம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது.

அதனை உணர்ந்தவர்கள் மாவட்ட மட்டத்திலும் ஒரு பேரவையை அமைக்கலாமென ஓர் எண்ணத்தைப் பேரவைக் கூட்டத்தில் முன்வைத்தனர். பேரவையின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்கள் மிகக் கடுமையாக எதிர்த்தனர். திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றம் அம்முடிவுக்கு எதிராக முதலிற் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையை 1974ம் ஆண்டு தோற்றுவித்தது. அது பேரவையினால் ஏற்றுக் கொள்ளப்படாத இயக்கமாகக் கருதப்பட்டது.

1977ம் ஆண்டு ஆடிக் கலவரத்தின் தாக்கத்தினால் இலங்கை இந்து இளைஞர் பேரவையும் சிதைந்து போனது. முக்கிய கோப்புக்கள், சொத்துக்கள் என்பன பெரும் பாதிப்புக்குள்ளாகின. பேரவையும் உறை நிலையடைந்தது. 1979ம் ஆண்டு திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளரும் தற்போதைய இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளருமான திரு.செல்லப்பா சிவபாதசுந்தரம் ஒரு தொகையான கோப்புக்களையும் சில உபகரணங்களையும் எப்படியோ திருக்கோணமலைக்குக் கொண்டு வந்து மாவட்டப் பேரவையின் காப்பில் வைத்திருந்தார்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையினது புனரமைப்புக் கூட்டம் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் 1979ம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. மிகக் குறைந்த தொகையான இந்து இளைஞர் மன்றங்கள் பங்குபற்றின. அதனால் அது முதலிருந்து தொடங்கப்பட்ட மாதிரி அமைந்தது. எப்படியும் அன்றிலிருந்து பேரவை எதிர்பார்த்தபடி இயங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதைய நிருவாகமும் குறிப்பாக அப்போதைய தலைமைச் செயலாளரும் அத்தகைய மந்த நிலையிலிருந்து அதனை மீட்க முடியாதவர்களாக இருந்தார்கள்.

நாட்டு நிலை வரவரத் தமிழர்களை மிகக் கடுமையாகப் பாதித்தது. அத்தகைய சந்தர்ப்பத்திற்தான் இப்பேரவை கடுமையாக உழைத்து இயங்கியிருக்க வேண்டும். ஆனாற் தவறிவிட்டது. இச்சமயத்திற் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆற்றிய பணி தனித்தன்மைவாய்ந்திருந்தது. சமூக சேவையில் ஈடுபட்டுத் தொண்டாற்றுபவன் அமைதியாகத் தொழிற்படுகிறான். ஒன்றுமே செய்யாதவன் சமூக சேவை பொதுத் தொண்டுகள் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கின்றான்.

1989ம் ஆண்டு 10வது ஆண்டுப் பேராளர் மாநாடு யாழ்ப்பாண மாவட்டப் பேரவையின் ஆதரவில் நடைபெற்றது. நிகழ்ச்சிகள் ஆரவாரமாகத்தான் இருந்தன. ஆனால் இயக்கம் தடங்கிப் போயிருந்தது. இதற்கிடையில் திருக்கோணமலை மாவட்டப் பேரவை பல வழிகளில் உதவி செய்து உந்துதலை மேற்கொண்டிருந்தது.

பின்னர் 1994ம் ஆண்டு அம்பாறை மாவட்டப் பேரவையின் ஆதரவில் 11வது மாநாடு நடைபெற்றது. திரு.செல்லப்பா சிவபாதசுந்தரம் தலைமைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பெற்றுத் திரு.வ.முருகப்பனின் தலைமையிற் பேரவை தனது உறைநிலையிலிருந்து சிறிது அசையத் தொடங்கியது. இந்து இளைஞர் மன்றங்களிடையே பலவீனங்களும் இருந்தன. பெரிய கட்டிடத்தைக் கொண்டு நிதி வளம் பெற்று உறுதியான மன்றமாக இருந்தாலோ நீண்ட பாரம்பரிய அமைப்பாகவிருந்தாலோ ஒத்துழைத்து இணைந்து பணியாற்ற முன்வருவதில்லை. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அற்றாற்கும் அலைந்தாற்கும் செய்யும் சமூக சேவையின் அவசியம், அவர்களை வாழ வைக்கும் அறப்பாங்கு என்பனவற்றை அறியாதவர்களால் நிருவகிக்கப்படும் மன்றங்கள் இவ்வாறு சிறிய கூட்டுக்குள் தம்மைச் சிறைப்படுத்தி விடுகின்றன.

அவர்கள் விரிந்த உலகிற்குப் புறம்பான கிணற்றுத் தவளைகளாவர். தமது இயக்கத்தின் நோக்கம் மக்கள் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலனே என்பதை உணர்ந்தவர்களால் வழி நடாத்தப்படும் மன்றங்கள் தாமாக முன்வந்து இணைந்து பெரிய வலுப்பெற்று விடுகின்றன. அதற்கு இன்னும் நீண்ட காலம் காத்திருக்க வேண்டும்.

இந்து மக்கள் சமூக சேவையைப் போற்றுபவர்களல்லர். அவர்களது கொடையும் வாழ்வும் கோயிற்களிற் சங்கமிக்கின்றன. கோயில்கள் நல்ல அற நிலையங்களாகத் திகழ்ந்திருக்குமேயாயின் மிகப்பெரிய பணியை ஏற்றிருக்கலாம். அழிக்க அழிக்க கோயில்களைக் கட்டுவதும், எரிக்க எரிக்க தேர்களைச் செய்வதும், உடைக்க உடைக்க கோபுரங்களைக் கட்டுவதுமாக இந்து மக்களின் செல்வம் கரைந்து கொண்டிருக்கின்றது.

இந்த நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் இந்து மக்கள் தான். ஆனாலும் பாதிக்கப்பட்ட அவல நிலையிற் தம்மைத் தாங்கக்கூடிய அமைப்பை அவர்கள் ஒருபொழுதும் ஏற்படுத்திக் கொண்டதில்லை. பொது அமைப்பு உறுதியாகவும் நிலைபேறாகவும் இருந்திருக்குமேயாயின் அவதிக்குள்ளாகும் இந்து மக்கள் ஆறுதலடைய வாய்ப்பிருக்கும். தற்காப்புக்காகவேனும் அவர்கள் அத்தகைய இயக்கமொன்றை நிலைநிறுத்தத் தவறிவிட்டனர்.

எப்படியும் இன்று கூட அவர்கள் அதை நல்ல படிப்பினையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குரிய பக்குவமும் அவர்களுக்கு ஏற்படவுமில்லை.

தமது பொருளாதாரம், கலாசாரம், குடும்ப வாழ்வு எல்லாம் சிதைந்த இன்றைய நிலைதானும் அவர்களை விழித்தெழத் தவறிவிட்டதென்றால் இனி எப்போது தான் அவர்களின் உறக்கத்தைப் போக்க முடியும். வெளியில் இருந்து விமர்சிப்பது அவர்கள் உளப்பாங்காகும். அத்தகைய நிலையிலிருந்து விடுபட்டு "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புள்ளீர்" என்பதை உணர்ந்து நடக்கத் தொடங்கினாற் துன்பங்கள் குறைந்து போகலாம்.

வீ.தி.அ.தில்லைநாதர்
பிரதித் தலைவர்,
இலங்கை இந்து இளைஞர் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் பாடப் பெற்ற தெய்வத்திரு நகராம் திருக்கோணமலையில்
இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலகம்
'சிவஞானச் செல்வர்' செல்லப்பா சிவபாதசுந்தரம்
தலைமைச் செயலாளர்,
இலங்கை இந்து இளைஞர் பேரவை.

அகில இலங்கையிலுமுள்ள இந்து இளைஞர் மன்றங்களின் உச்ச நிறுவனமாகவும் தேசிய ரீதியிலான இந்து இளைஞர்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பாகவும் முதன்மை பெற்று விளங்குகின்ற இலங்கை இந்து இளைஞர் பேரவையானது 1970ம் ஆண்டு மாசித் திங்கள் 20ம் நாள் கொழும்பு இராமக்கிருஸ்ண சங்கத்தில் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தாஜி அவர்களின் ஆசியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வமைப்பு ஆரம்பமாவதற்கு மிக முக்கிய காரண கர்த்தாவாக விளங்கியவர் அமரர் திரு.க.கு.நித்தியானந்தா ஆவார்கள். அன்னார் தமிழர்களின் பிரபல சமூக சேவையாளராகவும் அகதிகளுக்காகவும் ஏனைய தமிழர்களுக்காகவும் தியாக சிந்தையுடன் உழைத்த பெரியார் ஆவார். அன்னார் அப்பொழுது அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம் என அழைக்கப்பட்ட கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சங்கமே இவ்வமைப்பை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இட்டது எனலாம். ஆரம்பக் கூட்டத்தின் போது இவ்வமைப்பின் தலைவராக நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் பிரதிநிதி திரு.தா.சண்முகநாதன் தலைவராகவும், கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் பிரதிநிதிகளான திரு.க.சச்சிதானந்தன் தலைமைச் செயலாளராகவும், திரு.வீ.தி.அ.தில்லைநாதர் துணைத் தலைமைச் செயலாளராகவும், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதி திரு.ம.சிவநேசராசா நிதிச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். அகில இலங்கையிலும் செயற்பட்டு வந்த இந்து இளைஞர் மன்றங்களிடையே இணைப்பையும் எழுச்சியையும் ஏற்பட வைத்த தன்மையை இப்பேரவை தனது செயற்பாடாகக் கொண்டிருந்தது. இளைஞர் தலைமைக் கருத்தரங்கு, அகில இலங்கை ரீதியிலான இளைஞர் பேச்சுப் போட்டி, மலையக மண்சரிவின் போது நிவாரணப்பணிகள், திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் சிவராத்திரி காலத் தொண்டர் சேவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்து இளைஞர்களை ஜப்பான், கனடா முதலிய நாடுகளுக்கு அனுப்பிப் பயிற்சி பெற வைத்தமை போன்ற பல்வேறு விதமான சமய, சமூக, தலைமைத் தகைமைப் பணிகளை இப்பேரவை முன்னெடுத்து வந்தது. இலங்கையிலேயே இளைஞர் இயக்கங்களிலும் இந்து அமைப்புக்களிலும் முதன் முதலாக இந்துக்களுக்காகக் கொடி தினத்தை அறிமுகப்படுத்தியது இலங்கை இந்து இளைஞர் பேரவையே. 1972ம் ஆண்டு முதல் கொடி நாள் நடத்தப்பட்டது. 1981ம் ஆண்டு இறுதியாகக் கொடிதினம் நடாத்தப்பட்டது. இவை ஈழத்தின் இந்து இளைஞர் வரலாற்றில் நினைவிற் கொள்ளத்தக்க விடயங்களாகும். அதைப் போலவே 1977ம் ஆண்டையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இவ்வாண்டு நடைபெற்ற ஆவணி அமளியில் (வன்செயலில்) கொழும்பில் பேரவையின் அந்நாட் தலைமைச் செயலாளரும் பேரவையின் எழுச்சிக்காக அயராது உழைத்தவருமான திரு.க.சச்சிதானந்தன் கடுமையாகப் பாதிக்கப்பட்டதோடு பேரவையும் பாதிக்கப்பட்டது. 271, செட்டியார் தெருவில் ஒரு வாடகை வீட்டில் இயங்கி வந்த பேரவையின் பணிமனையில் இருந்த சில தளபாடங்கள் சில பெரியோர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஏனைய கோவைகள், ஆவணங்கள் யாவும் யாழ்ப்பாணம் நல்லூர் இந்து இளைஞர் மன்றத்தினரிடம் அனுப்பி வைக்கப்பட்டன. ஏனினும் அங்கு அப்பேரவையை முன்னெடுத்துச் செல்ல எவருமே முன்வராததைத் திரு.சச்சிதானந்தன் மூலம் அறிந்த நாம் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பிலே முயற்சித்து கொழும்பிலே ஓர் அன்பரிடமிருந்த பேரவையின் இரட்டித்தல் பொறியை (றோனியோ மெசின்) கொழும்பு விவேகானந்த சபையின் முன்னாள் மதிப்பார்ந்த பரீட்சைச் செயலாளரும் சைவத் தொண்டருமான திரு.சி.கந்தசாமி அவர்களுடைய உதவியுடன் பெற்றுக் கொண்டோம். நல்லூருக்கு அனுப்பப்பட்ட கோவைகளும், ஆவணங்களும் எமது வேண்டுகோளின் பேரில் திரு.சச்சிதானந்தன் அவர்களால் திருக்கோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. எனவே கொழும்பில் இயங்கி வந்த இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலகம் 1979ம் ஆண்டு முதல் தாயினும் நல்ல கோணமாமலைப் பெருமான் அருளாட்சி புரிகின்ற தெய்வத்திரு நகராம் திருக்கோணமலையில் செயற்பட வழி ஏற்பட்டமை அப்பெருமானின் பெருங்கருணைப் பேறென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கருதுகின்றோம். எம் பெருமானின் திருவருட் துணையுடனும் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினுடைய அனுசரணையுடனும் ஆரம்பத்தில் ஒரு வருடம் மடத்தடிச் சந்தியிலுள்ள திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றப் பணிமனையில் பேரவையின் அலுவலகம் செயற்பட்டு வந்தது. பின்னர் மாவட்டப் பேரவை செயற்பட்டுவரும் மகேஸ்வரி மண்டபத்திலும் செயற்பட்டு வந்தது.

எனினும் 1994ம் ஆண்டு முதல் இல.244, பிரதான வீதி, திருக்கோணமலை என்ற முகவரியிலுள்ள கட்டிடத்தில் பேரவையின் அலுவலகம் செயற்பட்டு வருகின்றதென்பதை இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகளும், அருளாட்சிக்குரிய துறவிகளும், இந்து நிறுவனங்களும், இந்துப் பெரியார்களும் அறிவார்களென எதிர்பார்க்கின்றோம்.

மேலும் 1992ம் ஆண்டு ஆனித் திங்களில் கொழும்பு இராமகிருஸ்ண சங்கத்தில் நாம் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி மகராஜ் அவர்களுடைய ஆசியுடன் கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தை ஆரம்பித்தோம். எனினும் இம்மன்றம் நாம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றிகரமாகவும் அமைப்பு ரீதியாகவும் இயங்கவில்லை என்பதை வேதனையுடன் நோக்குகின்றோம். எனினும் இந்து இளைஞர்களுடைய நாமத்தை இம்மன்றம் தனது பெயரளவில் தாங்கி நிற்பது கவனத்திற் கொள்ளப்படத்தக்கதாகும். இதே வேளையில் வட கொழும்பு இந்து இளைஞர் மன்றம் அமைப்பு ரீதியாகச் செயற்பட்டு வருவது பாராட்டிற்குரியதாகும். வயதில் சிறியவர்களானாலும் இம்மன்ற நிர்வாகிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவது எமக்கு மனநிறைவைத் தருகின்றது. நல்ல பணிக்கு ஆதரவுதராமல் அதற்குத் தொல்லைகளை ஏற்படுத்துவது எம்மவர்க்குரிய தனிச்சிறப்பாகும். அதையும் கொழும்பில் உள்ள அன்பர்கள் சிலர் செய்ய முயற்சித்தார்கள், முயன்றார்கள். இத்தகைய முயற்சிகளை 1990ம் ஆண்டும் 1993ம் ஆண்டும் சிலர் அரசியல் பிரமுகர்களின் செல்வாக்கைப் பெற்று செயற்படுத்த முனைந்தார்கள். எனினும் எவருக்கும் இப்படியான அமைப்பைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு உரிமையும் அருகதையுமில்லை என்பதை நாம் மிக ஆணித்தரமாகத் தெரிவித்ததையடுத்து அவர்கள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியைக் கைவிட்டார்கள். ஆனால் இவர்கள் பதவிகளைப் பெரிதாகக் கருதினார்களேயொழிய தொண்டைப் பெரிதாகக் கருதவில்லை என நாம் கருதுகின்றோம். ஆகவே "தொண்டலால் உயிர்க்கு ஊதியமில்லை" என்பதை இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நாம் உணர்த்த விரும்புகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் 1996ம் ஆண்டில் இராமகிருஸ்ண சங்கத்தில் இந்து சமயத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அருள் நெறி விழாவிலே தற்காலச் சூழ்நிலையில் இந்து சமய கலாசார மேம்பாட்டிற்கு ஆற்றப்பட வேண்டிய பணிகள் என்ற தலைப்பில் இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிறப்புரையாற்றிய போது நானும் எனது சிறப்புரையில் குறிப்பிட்ட விடயங்களை இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமானதாகும் என நினைக்கின்றேன். ஏனெனில் நாடெங்கிலுமிருந்து இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகளும், இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகளும், ஆலய தர்மகர்த்தாக்களும், இந்து சமயத் திணைக்களத்தினரும் இந்துப் பெரியோர்களும் அங்கு நிறைந்திருந்தனர். அங்கு நாம் கூறினோம் இந்து இளைஞர்களின் தலைமைச் செயலகம் திருக்கோணமலையிலேயே இயங்கி வருகின்றது. எனவே கொழும்பு, கண்டி, மற்றும் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள இந்து இளைஞர் மன்றங்கள் தலைமைச் செயலகத்தை அல்லது தலைமை அமைப்பை உருவாக்குவதற்கு நேரத்தை செலவழிக்காது இயங்கி வருகின்ற இலங்கை இந்து இளைஞர் பேரவையை வலுவுள்ளதாக்கவும் ஸ்திரப்படுத்தவும் ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்பதையே; அதையே இங்கு ஈண்டு குறிப்பிட்டு எல்லோரும் இணைந்து இலங்கை இந்து இளைஞர் பேரவையை வலுவுள்ள அமைப்பாகக் கட்டிவளர்க்க ஆவன செய்ய முன்வர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

> "'கடவுள் ஒன்றே' என்பதை உலகுக்கு முதன்முதல் எடுத்துக் கூறிய பெருநெறி சைவம்"
>
> – தவத்திரு குன்றக்குடி அடிகளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# இலங்கை இந்து இளைஞர் பேரவை

## நடப்பு வருட நிர்வாகிகள் விபரம்

தலைவர் : **திரு. வ. முருகப்பன்**
பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றம்

பிரதித் தலைவர் : **திரு. வீ. தி. அ. தில்லைநாதர்**
எழுதுமட்டுவாழ் இந்து இளைஞர் மன்றம்

தலைமைச் செயலாளர் : **"சிவஞானச் செல்வர்"**
**திரு. செ. சிவபாதசுந்தரம்**
இலிங்கநகர் இந்து இளைஞர் மன்றம்

துணைத் தலைமைச் செயலாளர்: **திரு. த. நேசராஜ்குமார்**
தம்பலகமம் இந்து இளைஞர் மன்றம்

துணைத் தலைவர்கள் : **திரு. சீ. யோகேஸ்வரன்**
வாழைச்சேனை இந்து இளைஞர் மன்றம்
: **திரு. க. பீதாம்பரம்**
கல்முனை இந்து இளைஞர் மன்றம்
: **திரு. ப. சிவலோகநாதன்**
வட்டுக்கோட்டை-அராலி இந்து இளைஞர் மன்றம்

நிதிச் செயலாளர் : **திரு. சு. தில்லைநாதன்**
வந்தாறுமூலை இந்து இளைஞர் மன்றம்

புனர்வாழ்வுப் பொறுப்பாளர் : **திரு. பா. சுசிதரன்**
கிண்ணியா இந்து இளைஞர் மன்றம்

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

**திரு. ஆ. குணசேகரம்** - சேனைக்குடியிருப்பு இந்து இளைஞர் மன்றம்
**திரு. த. கைலாயபிள்ளை** - அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றம்
**திரு. பெ. இளங்கோ** - கரடிப்பூவல் இந்து இளைஞர் மன்றம்
**திரு. வை. திவாகரன்** - பேராறு இந்து இளைஞர் மன்றம்
**திரு. பூ. சுரேந்திரராஜா** - முதலைக்குடா இந்து இளைஞர்மன்றம்
**திரு. மு. தம்பிமுத்து** - சந்திவெளி இந்து இளைஞர் மன்றம்
**திரு. க. சிவசங்கரநாதன்** - சரசாலை இந்து இளைஞர் மன்றம்
**திரு. இ. சிவநேசன்** - புத்தளம் இந்து இளைஞர் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரவையால் நடத்தப்பெற்ற செயற்திட்டத் தயாரிப்பும் அதன் முகாமைத்துவமும் என்ற அபிவிருத்திப் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்ற மன்னார் இந்து சமய வளச்சிச் சங்கப் பிரதிநிதி திரு.பி.இரகுநாதன் உரையாற்றுகின்றார். (1996 புரட்டாதி)



அபிவிருத்திப் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்ற பேரவையின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு.சீ.யோகேஸ்வரன் (வாழைச்சேன்ன இ.இ.ம.பிரதிநிதி) உரையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சீகாழிப்பிள்ளையும் திருவாரூர் அப்பரும் அருளிய உபதேசங்கள்"

ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசருக்கு முதுமைப் பருவம் வந்துற்ற காலத்தில் இவ்வுலகில் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இவ்வாறு கூறுவதற்கு தக்க காரணமுண்டு. முதன் முதலாகத் திருஞானசம்பந்தரைக் காண வேண்டுமென்ற விருப்பத்தால் சீகாழிப்பதிக்கு வருகிறார் நாவரசர். அவர் வருகிறார் என்பதைக் கேள்வியுற்ற ஞானக்குழந்தையாகிய சம்பந்தர், தான் செய்த நல்வினைப்பேறு எனக் கூறிக் கொண்டு அவரை எதிர்கொள்ளச் சென்றாராம். வருகிற திருநாவுக்கரசரின் வடிவம் இருந்த நிலையைக் கூறுகிறார் சேக்கிழார்:

"சிந்தை இடையறா அன்பும் திருமேனிதனில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்தரசும் எதிர்வந்தனைய"

என்று பாடுவது சிந்தனைக்குரியது. அதிலும் "திருமேனிதனில் அசைவும்" என்ற சொற்களால் நாவரசர் காழியுள் நுழைகின்ற பொழுது, வயது முதிர்ந்தவராகவே இருந்தார் என்று கொள்ள முடிகின்றது. அப்பருக்கு அந்தம் எண்பத்தொன்று சம்பந்தருக்கு அந்தம் பதினாறு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

நாவரசர் சமணம் புகுந்ததும், மீண்டதும், அல்லற்பட்டதும், தேவாரம் பாடத் தொடங்கியதும் ஆகிய அனைத்து நிகழ்ச்சிகளும் சம்பந்தர் இவ்வுலகிடைத் தோன்று முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். இதனை வலியுறுத்த ஒரு காரணமுண்டு. திருநாவுக்கரசர் தம் பாடல்களில் அதிகம் கூறாத சில சிந்தனைகள் சம்பந்தர் பாடல்களில் முதன் முதலாக ஏன் தோன்றுகின்றன என்பதை அறியவே இக்கருத்து இங்கே கூறப்படுகிறது.

ஆளுடைய பிள்ளையார் பிறந்ததைக் கூற வருகின்ற சேக்கிழார் சில நுண்ணிய கருத்துக்களை இவருடைய வரலாற்றில் பாடுகிறார். அவை ஆழ்ந்து சிந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவையாகும். சம்பந்தரின் புராணம் தொடங்குவதற்கு முன்னர் அவரை வணங்குவதற்கு சேக்கிழார் பாடிய முதற்பாடல்:

*வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க*
*பூத பரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத*
*சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்*
*பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.*

என்பதாகும்.

இவருடைய அழுகையின் பயனாக வேதநெறி தழைத்தோங்கிற்று. சைவம் விளக்கமுற்றது. உயிர் வருக்கம் பொலிவு பெற்றது என்று கூறுகின்றார். நாவுக்கரசர் தம் பாடல்களில் அதிகம் கூறாத சில சிந்தனைகளை சம்பந்தர் புராணத்தில் முதற் பாடலிலேயே சேக்கிழார் தருகிறார் என்பதை நினைவிருத்திக் கொண்டு ஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரத்தைப் பொது வகையால் நோக்குவோம்.

சைவ சித்தாந்த உண்மைகளாகிய பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் தத்துவங்களை சம்பந்தர் அருளிச் செய்த தேவாரங்களில் தெளிவு பெற ஓதியுள்ளார். எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களைக் கொண்ட உயிர்களுக்கு (பசு) இறைவனே (பதி) உயிர்க்குயிராய் நிற்கின்றான்.

பஞ்ச கிருத்தியங்களையும் செய்யும் இறைவன் பாசத்தாலும், புலன்களின் நேசத்தாலும் கட்டுப்பட்ட உயிர்களை வினையிலே ஈடுபடுத்தி அவ்வினைகளை அறுத்தருள்கின்றான். இறைவனை அடையும் வழிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் மார்க்கங்களை தத்துவரீதியாக உணர்த்திய ஞானசம்பந்தர் எளிதில் இறையருளைப் பெறுவதற்கு பக்தி மார்க்கத்தையே தேவாரங்களில் தெளிவாகக் கூறுகின்றார்.

ஞானசம்பந்தரின் தேவாரத்தில் அவருடைய வாழ்க்கை வரலாற்றுக்குரிய அகச்சான்றுகள் பலவற்றைக் காணலாம். திருக்கடைகாப்புக்களில் இந்தக் குறிப்புகள் பல கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போதையார் பொற் கிண்ணத்தடிசில் பொல்லாதெனதாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்" என்பது போன்ற குறிப்புகளும், "தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்சாற்றிய பாடல் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே" என்பது போன்ற திருக்கடைக்காப்புக் குறிப்புகளும் மேற்கூறியவற்றுக்கு உதாரணங்கள்.

சம்பந்தர் தம்மைப் பல இடங்களில் "தமிழ்விரகர்" என்று கூறிக் கொள்கிறார். அதற்கேற்றபடி அவருடைய பதிகங்களில் தமிழ்நடை வளம் பெற்றிருப்பதைக் காணலாம். இயற்கை அழகை வர்ணிப்பதிலும் சம்பந்தர் மிகமிகச் சிறந்தவர். இறைவனுடைய கீர்த்தியைக் கேட்போருள்ளத்தில் நன்கு பதியும் படி பதிகங்களைப் பாடியுள்ளார். தம்முடைய வாக்கு இறைவனுடைய வாக்கென்றே ஓரிடத்தில் பாடுகின்றார். திருஇலம்பைக் கோட்டூர் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் "எனதுரை தனதுரையாக" என்று குறிப்பிடுகிறார்.

உலகினருக்குச் செய்யும் உபதேச உருவில் அமைந்த பாடல்கள் மிகச் சிலவே. தம்முடைய குறையை எடுத்துக் கூறும் பாடல்கள் அவற்றிலும் சிலவே.

சம்பந்தர் திருப்பிரமபுரத்துக்கு அருளிச் செய்த திருப்பதிகமொன்றில் உலக மக்களுக்குக் கூறிய உபதேசங்களைக் காணலாம். ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு உபதேசத்தைக் கூறுகிறார்.

திருவிராகம் – பண் – நட்டராகம்

1. *"நம்பொருள் நம்மக்களென்று நச்சி இச்சை செய்து நீர்*
*அம்பரம் அடைந்து சால அல்லலுய்ப்பதன் முனம்*
*உம்பர் நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை*
*நம்பன்மேன நன்னகர் நலங்கொள் காழி சேர்மினே"*

அம்பரம் – நீர்க்கெதி

நமது பொருள், நமது மக்கள் என்று பொருட் பற்றும் மகப்பற்றும் உடையவர்களாகிய உலக பந்த பாசங்களில் அகப்பட்டு அல்லல்படுவதன் முன் எல்லார்க்குந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனும் எல்லாம் வல்ல உத்தமனாகிய சிவபெருமானை வழிபட்டு உய்தியடைவீர்களாக என்று மக்களுக்கு உபதேசம் செய்கிறார்.

இவ்வாறே இப்பதிகத்தின் ஏனைய பாடல்களிலும் அவர் மக்களுக்குச் செய்துள்ள உபதேசப் பகுதிகளை மாத்திரம் எடுத்துக் காட்டுகின்றோம். பாடல்களை முழுமையாகப் படித்து விளக்கமடைவீர்களாக.

**2.** *"பாவமேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்*
*ஏவமான செய்து சாவதன்முனம்"*

இறைவனை தூப தீபங்களால் வழிபடுவீர்களாக.

ஏவல் - குற்றம்

தீய காரியங்களைச் செய்யும் உள்ளத்தோடு பக்தியுமில்லாமல் குற்றங்களையே புரிந்து மரணமடைவதற்கு முன் நற்காரியங்களைப் பக்தியோடு செய்து இறையருள் பெறுங்கள்.

**3.** *"சோறு கூறையின்றியே துவண்டு தூரமாய் நமக்கு*
*ஏறு சுற்றம் என்கலே இடுக்கனுய்ப்பதன் முனம்"*

உணவின்றி உடையின்றி நலிந்த உனது சுற்றத்தாரும் உன்னை இகழ்வதற்குமுன் இறைவனைச் சரணடைந்து வாழுங்கள்.

**4.** *"நச்சிநீர் பிறன்கடை நடந்து செல்ல நாளையும்*
*உச்சிவம்மெனும் உரை உணர்ந்து கேட்பதன் முனம்"*

பிறரிடம் சென்று இரந்து நிற்கின்ற போது நாளைவா என்று கூறும் வார்த்தை உனது காதுகளில் கேட்பதன் முன்னம் இறைவனிடம் இரந்து நின்று அருள் பெறும் வாழ்க்கைகை மேற்கொள்ளுங்கள்.

**5.** *"கண்கள் காண்பொழிந்து மேனிகன்றி என்றாத நோய்*
*உண்கிலாமை செய்து நம்மை உய்த்தழிப்பதன் முனம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்பார்வை இழந்து உடல் நலிந்து பல நோய்களுக்கும் விருந்தாகி நீ அழிவடைவதன் முன் இறைவனைச் சரணடைந்து வாழ்வீர்களாக.

**6.** *"அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு அவந்தமே பிறந்துநீர்*
*எல்லையில் பிணக்கினிற் கிடந்திடாதெழும்மினோ"*
அவர்தம் – பாக்கியம்

இன்பமாக வாழ்வதற்குப் பாக்கியமற்றவனாக நீ பிறந்து எல்லையற்ற துன்பங்களில் கிடந்துழலாமல் இறையருள் பெற்று வாழுங்கள்.

**7.** *"பொய் மிகுந்தவாராய் பொறாமையோடு செல்லு நீர்*
*ஐயமிகுந்த கண்டராய் அடுத்திரைப்பதன் முனம்"*

பொய் பேசிப் பொறாமைப்பட்டு வாழாமல் சிவேட்டுடம் முதலிய நோய்களினால் துன்பப்படுவதற்கு முன்னம் சீர்காழிக்குச் சென்று சிவனை வணங்கி வாழுங்கள்.

**8.** *"காலினோடு கைகளும் தளர்ந்து காம நோய்தனால்*
*ஏலவார் குழலினார் இகழ்ந்துரைப்பதன் முனம்"*

அங்கங்கள் தளர்ந்து காம நோய்வாய்ப்பட்டு அல்லலுறுவதைக் கண்டு பெண்கள் இகழ்ந்து பேசுவதற்கு முன் சிவனருள் பெற்று சிறப்புடன் வாழ சீர்காழியை தரிசியுங்கள்.

**9.** *"நிலைவெறுத்த நெஞ்சமோடு நேசமில் புதல்வர்கள்*
*முலைவெறுத்த பேர் தொடங்கியே முனிவதன் முனம்"*

அன்பில்லாத பிள்ளைகளும் அன்பகன்ற மனைவியும் நிலை வெறுத்த நெஞ்சமோடு உன்னை கோபித்து வெறுப்பதன் முன்னம் சிலை பிடித்து எயிலெரித்த சிவபெருமானின் பாதங்களை வணங்கி அவனையே தஞ்சமடைந்து வாழுங்கள்.

இப்பதிகத்தில் சீர்காழிப் பதியடைந்து தோணியப்பரை வழிபட்டு வாழ்க்கையை சீராக்கி வாழுங்கள் என்று ஞானசம்பந்தர் உபதேசித்து ஆற்றுப்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாமூரில் திருவவதாரம் செய்தவர் திருநாவுக்கரசு நாயனார். இவர் நூற்றியிருபத்தாறு தலங்களுக்கு திருப்பதிகங்கள் பாடியிருக்கிறார். பெரும்பாலும் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலில் சிவபிரான் இராவணனுக்கு அருள் புரிந்ததைக் கூறியிருக்கின்றார். கயிலை மலையை இராவணன் எடுக்க சிவபிரான் காலால் நெரித்து அவனை அடர்த்து அப்பால் அவன் சாமகீதம் பாட அவன் செய்த பிழையை மறந்து நலஞ்செய்த அருளே தம்மையும் ஆட்கொண்டதென்ற எண்ணத்தால் இந்த வரலாற்றைப் பாடினாரென்று சேக்கிழார் கூறுகின்றார்.

இவருடைய திருப்பதிகங்களில் தாண்டகங்கள் மனத்தை உருக்கும் வகையில் அமைந்தவை. ஆதலால் இவரைத் தாண்டக வேந்தன் என்று சிறப்பித்துக் கூறுவர்.

நாவுக்கரசருடைய பாடல்களில் அவருடைய வரலாற்றைப் பற்றிய குறிப்புகள் பல வருகின்றன. அப்பூதி, அமர்நீதி, கணம்புல்லர், கண்ணப்பர், சண்டேசர், சாக்கியர், ஞானசம்பந்தர் ஆகியவர்களை இவர் குறிப்பிட்டு தனது வரலாறுகளைக் கூறியிருக்கிறார். இறைவனை நாயகனாகவும், தன்னை நாயகியாகவும் பாவித்து இவர் பாடிய திருப்பதிகங்கள் பலவுண்டு.

இவர் இறைவன்பால் ஊழியனுக்குரிய அன்பு முறையாகிய தாசமார்க்கத்தில் நின்று வழிபட்டார். இவருடைய பாடல்கள் இறைவனுடைய கீர்த்திகளையும் அவனுடைய பெருங்கருணைத் திறன்களையும் பல நீதிகளையுங் கூறுகின்றன.

தன் குறையை எண்ணி எண்ணி இரங்கும் பாடல்கள் பல. தம்முடைய குறைபாடுகளைக் கூறி இரங்குவதும், தம்மை ஆட்கொண்ட இறைவனை நினைந்து நினைந்து உருகுவதும் இவரியல்பு. ஆதலின் இவருடைய பாடல்கள் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் பாடல்களை விட மிகுதியாக நம்முள்ளத்தை உருக்குகின்றன.

தான் பல பல குறைபாடுடையவனென்று குறையிரப்பது போலவும், இறைவனை அடைந்தால் பல நற்பேறுகளைப் பெறலாமென்றும் தனது இறையனுபவங்களைக் கூறி மக்களுக்கு உபதேசம் செய்வது போலவும் இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் அமைந்திருக்கின்றன. பல காலம் இன்பமும், துன்பமும் நுகர்ந்து உலகில் வாழ்ந்தவராதலின் உலக அனுபவத்தைக் காட்டும் கருத்துக்கள் பலவற்றை இவருடைய தேவாரத்தில் காணலாம். மக்களுக்கு விரிவான உபதேசங்களை இவர் செய்திருக்கின்றார்.

நாவுக்கரசர் பாடிய 4ஆம் திருமுறையில் 5ஆம் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழியை வைத்து தன்குறை கூறிப் பிறர்குறை நீக்க உபதேசம் செய்கிறார். திருவாரூருக்குப் பாடிய முதற் பதிகத்தின் முதற் பாடலிது:

பழமொழி – பண் – காந்தாரகம்

1. *"மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த*
*மேனியான் தாள் தோழாதே*
*உய்யவராமெண்றெண்ணி உறிதூக்கி*
*உழிதந்தேன் உள்ளம் விட்டுக்*
*கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்களவ*
*மயிலாலுமாரூரைக்*
*கையினாற் தொழா தொழிந்து கனியிருப்பக்*
*காய் கவர்ந்த கள்வனேனே."*

இப்பாடலில் கூறும் பழமொழி "கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வன்" வீபூதியை உத்தூணமாகப் பூசிய சிவபெருமானுடைய தாளைத் தொழாது வீபூதியையும் அலட்சியம் செய்து சமண சமயத்தை நாடிச் சென்ற தனது குறையை இப்பழமொழி மூலம் உணர்த்துகின்றார். சைவ சமய நெறி கனி போன்றது. சமண சமய நெறி காய்க் கொப்பானது என்று பிற மதமாற்றத்தை வெறுக்கிறார். நமக்கும் இதனை அறிவுறுத்துகிறார்.

எல்லாப் பாடல்களையும் முழுமையாகக் கூறாமல் அப்பாடலிலுள்ள பழமொழிகளைக் கூறி அப்பருடைய உபதேசத்தைச் சிந்திப்போம்.

**2.** இரண்டாவது பாடல் கூறும் பழமொழி *"முயல் விட்டுக் காக்கை பின் போனவாறே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் என்பு, தோல், நரம்பாலாக்கப்பட்ட தேகத்தைத் தந்து முன் செய்த வினைப்பயனை நீக்கி இன்பமருளி எனது உள்ளத்தில் கோயில் கொண்ட சிவபெருமானருளிய சிவநெறியை விட்டு அவநெறியாகிய சமணம் சார்ந்த தனது குற்றத்தைக் கையிலே முயலிருக்க அதனை விட்டு வேறு சமயங்களுக்கு மதமாறும் மக்களுக்கு இந்த உபதேசத்தைச் செய்துள்ளார்.

**3.** மூன்றாவது பாடலில் கூறும் பழமொழி "*அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே*"

சமணர்கள் கூறிய பொய்ப்புரைகளை நம்பி சிவநெறியை விட்டுச் சென்ற எனக்கு சூலைநோய் தந்து சிவபெருமான் ஆட்கொண்ட பேரருட் திறத்தையும் தன் குறையையும் இப்பழமொழியால் உணர்த்தி மக்களுக்கு உபதேசம் செய்கிறார்.

**4.** நாலாவது பாடலில் வரும் பழமொழி "*பனி நீரால் பரவை செயப் பாவித்தேனே*"

சமணர்களைப் போல தலையை முன்முடித்து, பெண்களால் இகழப்பட்ட எனக்கு சிவபெருமான் தனது திருப்பாதம் காட்டி எனது தொண்டினையும் போற்றிப் புன்முறுவலால் என்னை ஆட்கொண்டான். நானோ அறியாமையினால் சிவநெறிக் கோட்பாடாகிய சமுத்திரத்தை விட்டு நீங்கி சமணர்களின் மதக் கோட்பாடாகிய பனிநீரினை சமுத்திரமாக்கலாமென நினைத்தேனே என்று வருந்தி மதம் மாறும் மக்களுக்கு உபதேசம் செய்கிறார்.

**5.** ஐந்தாவது பாடலில் வரும் பழமொழி "*ஏதன் போர்க்காதனாய் அகப்பட்டேனே*"

துர்ச்சனர்களாகிய சமணர்களுடைய சொல்லைக் கேட்டு சமணமே மேலான சமயமெனச் கூறி அலைந்து இருகையால் ஏற்றுண்ட ஏழையேன் நான். திருவாரூர்ப் பெருமானை என்னகத்தே வைக்காமல் அறிவிலியாக சமணர்களிடம் அகப்பட்டு வாழ்ந்தேன். ஆதலால் துர்ச்சனரைச் சாராமல் சற்சனரோடு சேர்ந்து வாழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.** ஆறாவது பாடலில் கூறும் பழமொழி "*இருட்டறையில் மலடுகறந் தெய்த்தவாறே*"

சமண சமயத்தைப் பின்பற்றி தலையை முண்டிதம் செய்து சமண சமயத்தையே புகழ்ந்து கூறி அலைந்த எனக்கு உறுதிப் பொருளுரைத்து என்னை ஆட்கொண்டவன் சிவபெருமான். அவனை எப்போதும் நினையாது சமண தத்துவங்களைப் புகழ்ந்துரைத்த செயலானது இருட்டறையில் இருந்த மலட்டுப் பசுவின் பால் கறக்க முற்பட்ட செயலாகி விட்டது. எனவே மதம் மாறி வாழ வேண்டாமென்று உபதேசம் செய்கிறார்.

**7.** ஏழாவது பாடலில் கூறும் பழமொழி "*விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறே*"

சிவநெறியை விட்டு சமண சமயத்தை ஏற்றுக் கொண்டதன் குறையை நினைத்து இப்பழமொழியைக் கூறுகின்றார். சிவசமயம் விளக்கு, பிறசமயம் மின்மினி என்கிறார் நாவுக்கரசர். சமணர்களைப் போல் வேடம் பூண்டு கையேந்தி உண்டு வாழ்ந்த வாழ்க்கையை பலரும் இகழ வாழ்ந்தேன். சிவபெருமான் எனக்கு நல்ல ஞானத்தைத் தந்தார். ஆதலால் சிவனையே முழுமுதலாக ஏற்று வாழுங்கள்.

**8.** எட்டாவது பாடலில் கூறும் பழமொழி "*பாழூரில் பயிக்கம்புக் கெய்த்தவாறே*"

பயிக்கம் – பிச்சை

சிவபெருமான் எனது ஆவியைப் போக்காதே தவிர்த்து என்னை ஆட்கொண்டான். நானோ அந்தச் சிவநெறியை மறந்து சமணர்களுடைய சொல்லைக் கேட்டு அவநெறியாகிய சமண சமயமே மேலானது எனக் கருதி அவர்களைச் சார்ந்து வாழ்ந்தேன் என்று மதம் மாறிய தன் குறையைக் கூறி உலக மக்களுக்கு உபதேசம் செய்கிறார். பாழடைந்த ஊரில் பிச்சை ஏற்கச் சொல்வது தவறு என்கிறார் அப்பர்.

**9.** ஒன்பதாவது பாடலில் கூறும் பழமொழி "*தவமிருக்க அவஞ் செய்து தருக்கினேன்.*"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரமெரித்து அவுணர்களுடைய அகங்காரத்தை அழித்தவன் சிவன். காமனை எரித்து மாயையை அழித்தவன் சிவன். காலனை அழித்து அடியாரைக் காத்தவன் சிவன். இப்படிப்பட்ட சர்வ வல்லமையுடைய சிவனைப் பின்பற்றும் சிவநெறியிருக்க அவநெறியாகிய சமண சமயத்தைப் பின்பற்றிய தனது குறையைக் கூறி மதமாற்றத்துக்காளாகாமல் வாழும்படி இப்பழமொழி மூலம் உலக மக்களுக்கு உபதேசம் செய்கிறார்.

**10.** பத்தாவது பாடலில் கூறும் பழமொழி "*கரும்பிருக்க இரும்பு கடித்தெய்த்தவாறே*"

கயிலாய மலையெடுத்த இராவணனை தனது கால் விரலால் நெரித்து அவனுடைய அகந்தையை அடக்கி அருள் பாலித்தவர் சிவபெருமான். பிரமனின் தலையொன்றைப் பறித்தவர். ஆலாலமுண்டு ஆருயிர்களைக் காத்தவர் சிவபெருமான். அவனைப் பின்பற்றும் சிவநெறியிருக்க அவநெறியாகிய பிறசமயம்புகும் செயலானது கரும்பிருக்க இரும்பு கடித்துச் சுவைப்பது போன்றதென தன் குறையை கூறி உலக மக்களுக்கு உபதேசம் செய்கிறார்.

திருவதிகை வீரட்டானேஸ்வரரைப் பாடிய பாடலொன்றில்

"*நீதியால் வாழ மாட்டேன் நித்தலும் தூ யேனல்லேன்*
*ஓதியும் உணர மாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்.*"

என்று தனது குறைகளைக் கூறி வாழ்க்கையைச் சைவ நீதி சிறம்பாமல் வாழுங்கள். எப்போதும் உடற் தூய்மையுடனும் உள்ளத் தூய்மையுடனும் வாழுங்கள். நீதி நூல்களையும், திருமுறைகளையும் ஓதியுணர்ந்து வாழுங்கள். சிவபெருமானை உள்ளத்திலே வைத்து பக்தி வயப்பட்டு வாழுங்கள் என்று தன் குறைகளைக் கூறி உலக மக்களுக்கு உபதேசம் செய்கிறார் அப்பர்.

ஞானசிரோன்மணி
**பண்டிதர் ஆர். வடிவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானக்குழந்தை திருக்குறள் திருமூலநாதனுக்குப் பேரவையின் பிரதித் தலைவர் திரு.வீ.தி.அ.தில்லைநாதர் பொன்னாடை போர்த்துதல் (1995 புரட்டாதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மக்களும் தெய்வத் தொண்டும்

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில்

"சிவநெறிச் செல்வர்"

**வே.ச.சுப்பையா**

சைவ மக்களென்போர் சைவ சமயக் கோட்பாடுகளுக்கு அமைவாகச் சீவிப்பவர். சைவ சமயமென்பது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம். அவர்களுக்கு லிங்கமே தூல சூக்கும உருவமாகும். "சிவாய நம" என்பது பஞ்சாட்சரம். "சி" என்பது சிவம். "வ" என்பது திருவருட் சக்தி. "ய" என்பது ஆன்மா. "ந" என்பது பிறவியைக் கொடுக்கும் திரோதன சக்தி. "ம" என்பது மலம். ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்கள். கன்மமும் மாயையும் ஆணவ மலத்தை நீக்க உதவுவனவாகும். ஆணவ இருளை நீக்க திருவருளாகிய ஒளியைப் பெற வேண்டும். அது வரைக்கும் ஒரு கைவிளக்கைப் போல் உதவுவனவே கன்மமும் மாயையும்.

விடிவா மளவும் விளக்கனைய மாயை
விடிவாதி கன்மத்து வந்து. (திருவருட்பயன்)

சைவ சமயத்துடன் விஷ்ணுவை வணங்கும் வைணவமும், பிள்ளையாரை வணங்கும் காணாபத்தியமும், குமரக் கடவுளாகிய முருகனை வணங்கும் கௌமாரமும், காளி, மாரி, கண்ணகி என்று வணங்கும் சக்தி வழிபாடாகிய சாக்தமும் ஒன்று சேர்ந்து தற்போது இந்துக்களின் வழிபாடு இந்து மதமாகி விட்டமையால் இவற்றைப் பிரித்துணர முடியாதவாறு வழிபாடும் தெய்வத் தொண்டுகளும் அமைந்து விட்டன.

பஞ்ச பூ தங்களால் ஆக்கப்பட்ட இப்பேருலகில் மக்களின் வழிபாட்டின் வசதிக்கேற்ப சங்கராச்சாரிய சுவாமிகள் அறு சமய நெறிகளை அறிமுகம் செய்து வைத்தார்கள். இந்த நெறி முறைகளில் நவக்கிரக வழிபாட்டையும் ஏனைய சிறு தெய்வ வழிபாடுகளையும் ஞானிகள் அறுசமய வழிபாட்டோடு இணைத்து மக்களின் வழிபாட்டினை நெறிப்படுத்தி இருக்கிறார்கள். இதனால் சைவ சமயக் கிரியைகள் எல்லா மூர்த்திகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவானதாக ஆக்கப்பட்டு அவை அவைக்குரிய மந்திரங்களும் கிரியைகளும் அபிஷேகங்களும் நைவேத்தியங்களும் ஆகமங்களில் பத்ததிகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குகளுக்கமைய அவற்றிற்குரிய மந்திரங்களையும் கிரியைகளையும் உபயோகித்து குருக்கள்மார் நடைமுறைப்படுத்துகின்றனர். இக்கிரியைகளின் உண்மை பலருக்கு விளங்குவதில்லை. ஏதோ கோயிலுக்குப் போகிறோம், சுத்த உணவுண்கிறோம், சுத்த ஆடை அணிகின்றோம், பூசை கண்டு மூலமூர்த்தியை வணங்கிய பின் கோவிலை வலம் வந்து பிரசாதம் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருகின்றோம். இதுவே தெய்வ வணக்கம் என நினைக்கின்றனர்.

இறைவனுக்கு தொண்டு செய்வதே சைவ மக்களின் பிரதான கடமையாகும். “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்று திருநாவுக்கரசு நாயனாரும் கூறினார். எல்லா நாயன்மார்களும் தனித்தனி வெவ்வேறு தொண்டு செய்தே சிவபதம் அடைந்தனர். தண்ணீர்ப் பந்தல் வைத்தவரும், குங்கிலியம் புகைத்தவரும், துணி வெளுத்துக் கொடுத்தவரும், அன்னதானம் செய்தவரும், பூ மாலை கட்டிக் கொடுத்தவரும், பெற்ற பிள்ளையையே கறி சமைத்துக் கொடுத்தவரும் இவ்வாறு அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி பெரிய புராணம் குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் உலக நடைமுறைகளும் வாழ்க்கை முறையும் இருந்த நிலைமை வேறு. இப்போது உலகில் பொய், களவு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு எனப் பல்வேறு காரியங்களும் மிக மிக மலிந்து விட்டன. அதற்கேற்ப இலங்கையில் மரண தண்டனையும் நீக்கப்பட்டு விட்டதால் தீய காரியங்கள் மலிந்து விட்டன.

சைவ சமயம் அனாதியானதும் உயர்ந்த விஞ்ஞான தத்துவங்களை உள்ளடக்கியதுமாகும். அதனாலேயே “மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.” இன்று தமிழ் மக்களும் தமிழ் மொழியும், உலகெங்கும் பரந்து மிளிர்கின்றன.

சைவ சமயக் கோட்பாடுகளைத் தற்கால நடைமுறைக்கு ஏற்பத் திருத்தியமைத்தல் சமயச் சடங்குகளின் கடமையாகும். ஆறுமுகநாவலர் செய்த சமயத் தொண்டுகளும், தமிழ்த் தொண்டுகளும் ஒரு பெரிய சமயச் சங்கம் செய்தவற்றிலும் மிக்க கூடியது என்பது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால மாணவர்களுக்குத் தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு பிழையின்றிப் பாடப் பயிற்சி கொடுக்க வேண்டும். இதனைத் தொண்டாகக் கருதி பணி செய்யக் கூடிய தொண்டர் சபைகளைக் கிராமங்கள் தோறும் அமைக்க வேண்டும். சிலர் அமைத்தும் வருகின்றனர். இச்சங்கங்கள் எல்லாம் காலத்திற்குக் காலம் ஒன்று சேர்ந்து சைவ சமய சம்மேளனமாக அமைத்தல் வேண்டும். அத்துடன் இடத்திற்கு இடம் தேவாரங்களையும் மற்றும் தெய்வப் பாடல்களையும் பிழையின்றி மாணவர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் சமய சங்கங்களின் பணியாகும்.

தேவாரங்களையும் மற்றும் தெய்வப் பாடல்களையும் இடத்திற்கிடம் பிழையாகப் பாடுகின்றனர். மாணவர்கள் மட்டுமல்ல அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் கூட அப்படியே பாடுகின்றனர். எனவே தேவாரத் திருமுறைகளைப் பிழையின்றி அச்சிட்டு வெளிப்படுத்த சைவ சமயச் சம்மேளனங்கள் முயல வேண்டும்.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் அம்மாவட்டத்தில் ஆற்றும் சமயப்பணி போற்றுதற்குரியது. அவ்வாறே இலங்கை இந்து இளைஞர் மன்றப் பேரவையும் பணியாற்ற வேண்டுமென்பதே, மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் பேரவா.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

**தற்பெருமையையும், அகந்தையையும் இறைவனின் காலடியில் வைத்து அவரை உள்ளன்போடு வணங்கினால்தான் அவரின் அருளும் கருணையும் கிடைக்கும். உங்கள் துன்பங்களைச் சமாளிக்கும் மன உறுதியையும் இறைவன் உங்களுக்குக் கொடுப்பார்.**

– *சின்மயானந்தா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்துழைமின்

**தாமரைத் தீவான்**

சான்றோர்கள் அன்றே சமைத்திட்ட இந்து நெறி,
ஊன்று கோலாய் இன்றும் உதவும் பழைய நெறி,
தனி ஒருவராலன்றிச் சமைந்த புனித நெறி,
மனித உரிமைகளை மதிக்கின்ற வாழ்வு நெறி,
ஆல்போல் தழைத்தே அறுகாக வேர்விட்டே
கோல் ஊன்றி நின்றே ஆகியே குன்றாத சைவ நெறி,
மாற்று நெறிப் போக்காலே மங்கும் பொழுதெல்லாம்
ஏற்றுமே நற்றொண்டால் இயக்கினோர் பற்பல பேர்!
இன்றிங்கிருக்கின்ற இந்தின் அமைப்புகளுள்
நன்றிந்திலங்கையின் நல்லிளைஞர் பேரவையோ
என்றுமே தொண்டாற்றி எப்போதும் மக்களிடம்
சென்றடையத் தக்க பல சேவைகளைச் செய்வதனால்
நன்றிக்குரியதென நல்லோர் புகழ்கின்றார்,
நின்று நிலைத்திடவும் நீடூழி வாழ்ந்திடவும்,
இலங்குகின்ற ஈழத்தின் இந்திளைஞர் பேரவையைத்
துலங்க வைக்கப்பற்பல பேர் தொண்டாற்றிச் சென்றதெல்லாம்
நெஞ்சம் மறந்திடுமா, நெடு நாள் பறந்தாலும்?
கொஞ்சமா பட்டவைகள், கூறுவதும் சாத்தியமா?
தமிழகதிப் புனர்வாழ்வின் தகுந்த கழகமதை
அமை நித்தியானந்தா ஆற்றல் மறப்பதுவா?
கொழும்பில் ஏழுபதுகள் கூடிப் பணிபுரிந்த
பழுதில் சண்முக நாதன் புலோ சச்சிதான்ந்தம்,
தில்லைப் (பெரு) நாதர் சிவநேச(நல் ) ராசா
வல்லார் பணியெல்லாம் வாழ்த்தாதிருப்பதுவா?
கொழும்புக் கலவரத்தால் குடிபெயர்ந்த ஆவணங்கள்
நடுவியே நல்லூரால் நமது மலைப் பேரவை சார்
சிவபாத சுந்தரரால் சீர்மாநாடொன்பதுவும்
அவமின்றி நிகழ்வுற்ற அதையார் மறந்திடலாம்?
அரசரட்ணத்தோடும், அருந்தில்லை நாதனொடும்,
முருகப்பனாரோடும், முழுமைச் சிவபாத
சுந்தரத்தார் தம்மோடும், சுந்தர(மா) லிங்கம் சேர்
அந்த மாநாட்டினையும், அருமெண்பத் தொன்பதையும்,
நல்லை நகர்தனையும் நம்மிலே யார் மறப்பார்?
கல்முனையைத் தொண்ணூற்று நாலினிலே காணாரார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லுந் தமிழீழம் விழையுந் தலைநகரத்
தொல்பதியாமிந்தத் தூய திருமா மலையில்
வெருகுதானிய ஆண்டில் விரிவாய் நிகழவுள (18,19-04-1998)
தகுதி மாநாட்டிற்குச் சகல மாவட்டத்தின்
தமிழிந்தமைப்புக்களும், சைவப் பெரியாரும்
நமது திருமலையை நாடுங்கால் வரவேற்கத்
திருமலை மாவட்டத்தின் சிறப்பான இந்திளைஞுப்
பெரும் பேரவையாளர்கள் பேரன்புளங் கொண்டே
காத்திருப்பர் – ஆதலினால் காலத்தோடொத்துழைமின்!
பார்த்திருப்பர் – ஆதலினால் பங்களிக்க மறவாதீர்!
ஈழத்தின் இந்திளைஞர் எழிற்பேரவை வாழ்க!
வாழத் துணை நிற்கும் வண்டமிழும் வாழியவே!

## சைவத் திருமுறைகள்......

திருமுறை என்பது பாடுவோரையும், கேட்போரையும் இறையுணர்வில் விரைவில் ஈடுபடச் செய்யும் தெய்வீகப் பாடல்களின் தொகுப்பு ஆகும். இத்தகைய மேன்மையுடைய எண்ணிலடங்காப் பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது நம் தமிழ் மொழியே.

'திரு' என்பது சிவ பரம்பொருளையும், சிவத்தோடு இணைபிரியாதிருக்கின்ற அருளாகிய சக்தியையும் அச்சக்தியின் துணையால் உயிர்கள் அடையும் பேரின்பத்தையுமே குறிக்கும். இதையே அப்பர் பெருமான் "திருவே என் செல்வமே" என்றும், "சென்றடையாத திருவுடையானை" என்றும் முறையே சிவபெருமானையும், சிவசக்தியையும் குறிப்பிடுதலால் தெளியலாம்.

'முறை' என்பது அன்பு செய்தல், வேண்டுதல், நூல், பழைமை, முறைமை மனித வாழ்க்கை முறையைச் சீராக்குதல், ஒழுங்குபடுத்தல் முதலாம் பல பொருட்களை உணர்த்தும். "இறை நிலம் எழுதுமுன் இளைய பாலகன், முறை வரைவேன் என முயல்வ தொக்கும்" என்ற கந்தபுராண அவையடக்கச் செய்யுள் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. திருமுறைகள் ஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் ஈறாகவுள்ள அருளாளர்கள் இருபத்தெழுவரால் பாடப்பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் இந்து இளைஞர்களின் பங்களிப்பும்

சி.மகேந்திரராஜா
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
திருக்கோணமலை.

இந்து மதம் காலவரையறை செய்யப்படாத மதமாகும். பரந்து விரிந்த சமுத்திரம் போன்றதே, இந்து மதம். பல இன்னல்கள், சோதனைகள் ஏற்பட்ட போதிலும் தனது தனித்துவத்தை இழந்து செல்லாது தனக்கென ஒரு இடத்தைப் பெற்று மேலோங்கி நிற்கிறது. மனித வாழ்வியலோடு வாழ்க்கைக்கு வழி அமைத்து நிற்கும் இந்து மதத்தின் பெருமைதான் என்ன! இந்து மதத்தில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட நலிவுகளை அவ்வக் காலங்களில் தோற்றம் பெற்ற அடியார்கள் பேணிக்காத்து இன்று நாம் இந்து மதத்தில் நிலைத்து வாழ வழி அமைத்துள்ளனர்.

மனிதப் பிறவியின் நோக்கம் என்ன, அதன் முடிவு என்ன என்பதை தெளிவாக விளக்கி நிற்கிறது இந்து மதம். வேதம், ஆகமம், உபநிடதம், திருமுறைகள், புராணம், இதிகாசம் போன்ற பல நூல்கள் இந்து மதத்தின் உள்ளாக்கங்களை எடுத்து இயம்புகின்றன. மனிதனுக்கு நம்பிக்கையை ஊட்டி மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டி நிற்கிறது இந்து மதம். வாழ்க்கை வேறு, சமயம் வேறு என்று நினைப்பவர்களும் உளர். வாழ்க்கை வேறு சமயம் வேறு அல்ல, வாழ்க்கைக்கு வழிகாட்டி நிற்பது தான் சமயம். சமயம் என்றால் என்ன? சமய வாழ்க்கை வாழ்ந்து வழிகாட்டிய அருளாளர்களால் உருவாக்கம் பெற்றதுதான் சமயம்.

*"அன்பே கருவாக அன்பே பொருளாக அன்பே உருவாகக் கொண்டது தான் இந்து மதம்"*

*"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார் அன்பே*
*சிவமானதாரும் அறிகிலார்"* (திருமந்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே அடியார்களினதும், ஆழ்வார்களினதும், வாழ்க்கை நெறியில் அன்பைக் காண்கிறோம். அவர்கள் கடைபிடித்து நெறிப்படுத்திய பண்பும் அது தான். இவ்வாறான இந்து மதத்தின் இன்றைய இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் பெறுமதியானதாகக் கொள்ளப்படுகின்றது. இன்றைய சமுதாயத்தின் முதுகெலும்பு என்று கொள்ளப்படுவது இன்றைய இளைஞர்களே. வயதால் முதிர்ந்தவர்களையும் வயதில் இளையவர்களையும் நடுநின்று கட்டிக் காப்பவர்கள் இளைஞர்களே ஆவர். ஆன்மீகத்தால் அருளொளி பரப்பிய அடியார்கள் போல் சமயத்தை அறிந்துணர்ந்து அதன் வழி செயல்படும் அன்பர்களால் தான் நல்லதொரு மாசற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

இந்து மக்களை ஒன்றிணைப்பதிலும் ஒற்றுமையைப் பேணுவதிலும் இந்து இளைஞர் மன்றங்கள் துணை நிற்கின்றன. இலங்கையிலுள்ள இந்து மக்களை அமைப்பு ரீதியாக ஒன்றிணைப்பதில் அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை தனது பணியை முன்னெடுத்து நிற்கின்றது.

சமய நெறியை மக்கள் அறிந்துணர்ந்தால் அங்கே போட்டி இருக்காது, பொறாமை இருக்காது, வஞ்சகம் குடிகொள்ளாது, மக்களிடம் நல்ல மனோ நிலை காணப்படும். இந்த வகையில் இன்றைய இந்து இளைஞர்களின் பங்களிப்பும் பெரிதும் பயன்படுகின்றது.

அஞ்சாத நெஞ்சம் கொண்ட இளைஞர்களே அளப்பரிய சேவை செய்யக்கூடியவர்கள். ஆகவே இளைஞர்களின் பணி மாபெரும் பணியாகக் கொள்ளப்படுகின்றது. ஆன்மீகத்தை உணர்ந்த இளைஞர்களினால் தான் சமுதாய எழுச்சியை ஏற்படுத்த முடியும். இந்த வகையில் இந்து சமுதாயத்தின் இளைஞர்களை தட்டி எழுப்பி விழிப்படையச் செய்து வீரமுழக்கம் செய்த இந்து இளைஞன் சுவாமி விவேகானந்தரை நாம் போற்றுகின்றோம். இளைஞர் பருவத்தில் தான் சிறப்பான பணிகளைச் செய்ய முடியும். இந்த இளமைப் பருவ பணிதான் ஒவ்வொரு இளைஞனின் எதிர்காலத்தையும், நடைமுறைக் காலத்தையும் சிறப்பித்துக் கூறுவது. இவ்வாறாக சிறப்பான பணிகளை இளைஞர்கள் முன்னெடுக்கும் வகையில் உருவாக்கம் பெற்றது இந்து இளைஞர் மன்றங்கள் என்று குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வழிபாட்டை மாத்திரம் போற்றாது சமூக வாழ்விற்கான அனைத்துப் பணிகளையும் மேம்படுத்தும் வகையில் இந்து இளைஞர்களின் பணி தங்கி நிற்கின்றது. புனர்வாழ்வுப் பணிகளில் இந்து இளைஞர் மன்றங்கள் செயல்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

*"எம் கடன் பணி செய்து கிடப்பதே"*
(நாவுக்கரசர்)

*"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"*
(கீத உபதேசம்)

மேற்குறிப்பிட்ட உபதேசங்களுக்கு ஏற்ற வகையில் இந்து இளைஞர்களும் தங்களது சேவையை தியாக மனப்பான்மையுடன் ஊதியமின்றி செய்து வருகின்றார்கள். கிராம மட்டத்திலான இந்து இளைஞர் மன்றங்கள் மாவட்ட மட்டத்திலான இந்து இளைஞர் பேரவை தேசிய மட்டத்திலான பேரவை என்ற வகையில் இந்து இளைஞர்களின் சேவை ஒன்று திரட்டி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள இந்து இளைஞர்களை பணிகளில் பங்கு கொள்ளச் செய்வதில் சிறந்த அமைப்பாக இலங்கை இந்து இளைஞர் பேரவை திகழ்கின்றது.

எனவே எதிர்கால இந்து சமுதாயம் இன்றைய இந்து இளைஞர்களின் செயல்திறனால் மேன்மையுறும் என்பதில் ஐயமில்லை.

**"கற்பனை கடந்து சோதி கருணையே வடிவமாகி**
**அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்**
**சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று**
**பொற்பிறு நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"

திருமதி கந்தையா இராசநாயகி அவர்கள்

"மனிதனாகப் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும்." இது ஆன்றோர், சான்றோர், ஞானிகள் முதலானவர்களின் அனுபவ ஆன்மீக அறிவுரை.

"அரிது, அரிது, மானிடராதல் அரிது" என்றார் ஔவைப் பிராட்டியார். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்றார் சமய குரவர்.

இவ்வறிவுரைகளின் மகத்துவம் பெரியது. உள்ளத்தால் உயர்ந்தது. தூய வாழ்க்கையின் ஆனந்தமே இவ்வறிவுரைகள். தாம் பெற்ற இன்பம் இவ்வையகத்தார் பெற்று பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்காக மரக்கலமாகிய சன்மார்க்க நெறியை மனம், வாக்கு, காயத்தினால் நம் முன் படைத்துள்ளனர்.

மனிதனுக்குரிய ஏழு பருவங்களும் ஒவ்வொரு நிலையிலும் பெரும் பொறுப்பு வாய்ந்தனவேயாகும். மாதா, பிதா, குரு முதலியோரின் அறிவு, ஆற்றல், சாதனை, போதனை என்பவற்றினால் மனிதன் மாண்பு பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழும் நிலை எய்தி தெய்வத்துள் வைக்கப்படுகின்றான்.

"*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படுகிறான்*" - வள்ளுவர் வாய்மொழி

"மனிதனே மேலானவன் எல்லா மிருகங்களை விடவும் எல்லாத் தேவர்களை விடவும் மனிதன் உயர்ந்தவன். மனிதனை விட உயர்ந்தவர் யாருமே இல்லை."
-சுவாமி விவேகானந்தர்

மனிதனுக்குரிய பருவங்களில் காளைப்பருவமே மிக முக்கியம் வாய்ந்தது. இம்மைக்கும், மறுமைக்கும் உரிய சேமிப்பு இப்பருவத்திற்குரியது. தனக்கும், பிறர்க்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கும், நாட்டிற்கும், ஊருக்கும், உலகுக்கும் உழைக்கும் சேகரிப்பே இப்பருவத்தில் உதயமாகிறது.

மிகச்சிறிய ஆலம் வித்தில் உருவாகிய ஆலவிருட்சம் யாவர்க்கும் தண்ணளி கொடுக்கிறது. நதிகள் நீரைத் தாங்களே பருகுவதில்லை. மரங்கள் பழங்களை தாங்களே உண்பதில்லை. நீர் பொழியும் மேகக் கூட்டங்கள் தானியத்தை தாங்களே உண்பதில்லை. சான்றோர்கள் தமக்காக வாழ்வதில்லை என்னும் விதை விதைக்கப்படும் பருவம் இளம் பருவமே. பசு மரத்தில் ஆணி ஏறுவது இலகு. ஈரக்களி மண்ணில் உருவங்கள் அமைப்பது சுலபம். அது போல் மனிதனின் இளம் பருவத்தில் சேகரிக்கும் சேமிப்பும் அமையுமென்பதற்கு ஐயமில்லை.

இளைஞர் சமுதாயம் ஒரு நாட்டின் முதுகெலும்பு. உடலின் முதுகெலும்பு சீரிய செம்மை நிலையிலிருந்தால் தான் மனிதனின் நடமாட்டம் நல்லதாய் அமைகின்றது. நாட்டின் முதுகெலும்பாகிய இளைஞர் சமுதாயம் சீரும் சிறப்புமாக அமைந்தாற்றான் அந்நாடு பிரகாசம் பொருந்தியதாக இருக்கும்.

உலகியற் கல்வி மாத்திரம் ஒரு இளைஞனை நாட்டிற்குரியவனாக்காது. வாழ்க்கையின் குறிக்கோள் அறிவைப் பெறுவது மாத்திரமல்ல, பட்டம் பதவிகளுடன் பணம் சம்பாதித்து வாழும் வாழ்க்கை சிறியோருக்குரியது என்பதை நம் மகான்கள் சாதித்துக் காட்டியுள்ளனர்.

பட்டம் பதவிகளைப் பற்றிப் பிடித்தவர்கள் எவருமே இன்று நிலைத்திருக்கவில்லை. பட்டம் பெற்ற நரேந்திரன் சுவாமி விவேகானந்தர் ஆவார். பறிஸ்ரர் ( Barrister) பட்டத்தை துறந்த காந்தி மகாத்மாவென்று நம்மிடம் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். சமய ஞானிகளை நோக்கினால் அவர்களும் இளமையில் தேடிய ஞானச் செல்வத்தினால் நம்மை வழி நடத்துகின்றனர்.

மாணவ நிலை மனித மாண்பை வளர்க்கும் பருவம். "எழுமின்! விழுமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்!" என்று இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்த வீர புருஷரின் வீர முழக்கம் மாணவ சமுதாயத்திற்கு வீர முரசன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ சமுதாய விழிப்புணர்ச்சிக்குப் பிரார்த்தனையும் பிரமச்சரியமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக அமைந்துள்ளன. பிரார்த்தனை மூலம் ஆத்ம சக்தியை வளர்ப்பதற்கு பிரம்மச்சரியத்தின் தூய்மையே உறுதியாக உள்ளது.

"ஒழுங்கு, தியாக புத்தி, பணிவு, மன உறுதி ஆகியவையின்றி உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியாது. இந்தக் குணங்களை அளிப்பதற்கு பிரார்த்தனைக்கு உள்ளது போன்ற சக்தி வேறு எதற்கும் கிடையாது." என்பது காந்தியடிகளின் அனுபவ மொழி.

மனிதனுடைய சக்தியைத் தன்வயப்படுத்திப் பயன்படுத்தத்தக்க முறையில் செலுத்துவதே கல்வி எனப்படும். எளிமையும் தூய்மையும் உடைய வாழ்க்கைக்கு வழிகோலித்தரும் கல்வி இம்மைக்கும், மறுமைக்கும் பயன் தருவதாகும்.

"நீரளவையாகுமாம் நீராம்பல், தான் கற்ற நூலளவையாகுமாம் நுண்ணறிவு" என்பது நீதி நூல் வாக்கியம். இளம் பருவத்தில் உள்ளத்தைப் பண்படுத்தும் நூல்களை வாசிக்கும் பயிற்சியில் ஈடுபடுவோர்:

"*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக் கேட்ட தாய்*" என்ற குறள் மொழிக்கும்,

"*இவன் தந்தை எந்நோற்றான்*" என்ற வள்ளுவ வாய்மொழிக்கும் உரியவனாகின்றான்.

இன்றைய இளம் சமுதாயம் நாகரீகம், அறிவியல் என்று கூறிக் கொண்டு தத்தளிக்கும் நிலையில் கிடந்து அல்லல்படுவது கண்கூடு. சுயநலமற்ற அறவாழ்வு ஆனந்தம் தரும். ஒருவன் ஒன்றைத் தன்னலமற்று நேசிக்கும் நிலையை அடைந்தால், படிப்படியாக உலகனைத்தையும் அடையலாம். சுவாமி விவேகானந்தரின் கர்ச்சனையும் காந்தியடிகளின் சத்திய சோதனையும் ஞானிகளின் சாதனைகளும் புராண இதிகாசங்களின் தத்துவ விளக்கமும் இளைஞர் சமுதாயத்தின் திறவு கோலாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம் காட்டும் வாழும் வழி

"*அரிது அரிது மானிடராதல் அரிது*" என்னும் கூற்றுக்கிணங்க இம்மானிடப் பிறவி கிடைத்தற்கரியது எனலாம். இறைவன் இவ்வுடம்பை எமக்குத் தந்தது தன்னை வழிபட்டு முத்தியின்பம் அடைவதற்கேயாகும் என்பது நல்லை நகர் ஆறுமுகநாவலரது நல்வாக்காகும். அவ்வகையில் நோக்கும் போது தினமும் இறைவனின் திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே எமது முக்கிய கடமையுமாக இருக்கிறது. இக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு தனிப்பட்ட ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் செயல்படக்கூடிய பல்வேறு வழிமுறைகளை எமது இந்து சமயம் எடுத்துக் காட்டுகின்றது. அவற்றுள் சிலவற்றை பார்ப்போம்.

காலையிலே படுக்கைவிட்டு எழுந்திருக்கும் பொழுது இறைவன் திருநாமத்தை "சிவசிவ" என உச்சரித்துக் கொண்டு,

மேலைவிதியே வினையின் பயனே விரவார் புரம் மூன்று எரிசெய்தாய்
காலையெழுந்து தொழுவார் தங்கள் கவலைகளை வாய் கறைக்கண்டர்
மாலைமதியே மலைமேல் மருந்தே மறவேன் அடியேன் வயல் சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே.

என்னும் தேவாரத்தை ஓதுதல் வேண்டும். மேலும் எமது காலைக் கடன்களை முடித்து கிணற்றில் நீராடுகின்ற போது "களித்துக்கலள்ததோர் காதறகசிவொருகாவிரிவாய்" என்னும் தேவாரத்தையும் ஆறு குளம் என்பவற்றில் நீராடுகின்ற போது "ஆர்த்த பிறவித்துயர் கெடலாம்" எனத் தொடங்கும் திருவெம்பாவையையும் பாடி இறை உணர்வுடன் எமது மனத்தையும், உடலையும் தூய்மை செய்து கொள்ள வேண்டும் என்கிறது இந்து சமயம். பின்னர் இறைவனை சுவாமியறையிலோ அன்றி ஆலயத்திலோ வணங்குகின்ற போது "சலம்பூவொடு தூப மறந்தறியேன்" என்னும் அப்பர் தேவாரத்தை உருகிப்பாடி வேண்டுதல் செய்யலாம்.

இன்னும் உடலிலே திருநீறு தரிக்கின்ற வேளையிலே -

கருவாய்க்கிடந்துன் கழலேஎனினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பாடித்தரித்தல் வேண்டும். மேலும், நாம் உணவுண்ணும் வேளைகளிலெல்லாம் "அன்னம்பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்" எனத்தொடங்கும் தேவாரத்தை ஓதுவதற்கு மறக்கக்கூடாது என்பது திருவாக்கு.

நாம் அன்றாடம் எமது தொழிலை ஆரம்பிக்கின்ற வேளைகளிலெல்லாம், "செய்யும் தொழிலே தெய்வம்" என்னும் இதய சுத்தியுடன் ஆரம்பித்துப் பணிபுரிதல் வேண்டும். இறுதியாக நாம் எமது அன்றாடக்கருமங்கள் யாவற்றையும் முடித்து இரவில் தூங்குகின்ற போது,

"அருத்தமாவது நீறு அவிலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூதம் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே."

எனத் திருநீறு சாத்தி இறைவனுக்கு நன்றி கூறி சாந்தியும் சமாதானமும் வேண்டிச் சயனிக்க வேண்டும். இதுவரை எமது சமய குரவர்களது வாழும் முறைமை பற்றிய வழிகாட்டல்களில் சிலவற்றைப் பார்த்தோம். இனி தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறள் சோலையுள் புகுந்து சிலவற்றைப் பறிப்போம்.

ஒருவர் கல்வியைக் கற்பதன் நோக்கமே எல்லாம் வல்ல இறைவனை வணங் குதலே என்பதனை

*"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா அர்எனின்"* என அறுதியிட்டுக் கூறுகின்றார். இன்னும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்பதைக் கூறவந்த வள்ளுவர்,

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்"*

எமது குடும்ப வாழ்வு பண்பும் பயனுமாக அமைய வேண்டுமானால் அக்குடும்ப உறுப்பினர்களிடையே அன்பும் தருமசிந்தனையும் நிறைந்திருக்க வேண்டுமாம்.

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் ஆகிவிட்டால் அக்கணவனும், மனைவியும் பெறுகின்ற பதினாறு பேறுகளில் முக்கியமான பேறு அறிவும், ஆற்றலும் மிக்க மக்களைப் பெறுதல்:

*"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த*
*மக்கட் பேறல்ல பிற"*

இன்னும் தரும நெறியிலே பொருள்களைச் சம்பாதித்து அப்பொருட்களைப் பாதுகாத்து வாழ்வதெல்லாம் நம் வீடு தேடிவரும் விருந்தினர்களை உபசரித்துப் பேணுவதற்கே என்பதை:

*"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"* என்பதிலிருந்து உணரலாம்.

பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கூறவந்த வள்ளுவப் பெருந்தகை தந்தையின் கடமையாக:

*"தந்தைமகற்கு ஆற்றும் உதவி அவையத்து*
*முந்தி இருப்பச் செயல்"* என்றும்,

மகனின் கடமையாக,

*"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை*
*என்நோற்றான் எனும் சொல்"* என்றும் மகன் சான்றோனாக விளங்குகிறான் எனக் கேட்ட தாயின் உள்ளம்,

*"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக் கேட்ட தாய்"* என்னும் படிக்கு விளக்குகின்றார். இன்னும் மனிதர்களாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் நன்றியுணர்வை மறந்தவர்களாக வாழக்கூடாது என்றும் நன்றி மறந்தால் உய்வு கிடையாது என்றும் வலியுறுத்துகின்றார்.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் நமக்குத் துன்பம் செய்த போதிலும் கூட நாம் அதற்குப் பிரதியுபகாரமாக அவன் வெட்கமடையும்படி நன்மை செய்ய வேண்டுமென்பதின் வெளிப்பாடே,

*"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்"* என்னும் குளறாகும்.

இன்னும் நட்பு என்றால் என்ன என்பதை விளக்க வந்த வள்ளுவர்,

*"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு"* எனக்கூறி மகிழ்கிறார்.

அதுமட்டுமல்ல இல்லறத்தவர்கள் வறியவர்களுக்கும், துறவிகளுக்கும் துணையாக இருந்து பணி செய்வதோடு இறந்த மூதாதையர்களுக்கு வேண்டிய பிதிர்க்கடன்களையும் ஆற்ற வேண்டுமென்பதை,

*"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை"* என்னும் குறள் விளக்குகின்றது.

இவ்வாறு மனிதர்களாகிய நாம் வாழும் வழிகளை சமய குரவர்கள், முனிவர்கள், யோகிகள், அறிஞர்கள் மூலமாக தந்த இந்து மதம் நாம் நோற்கின்ற இந்து விரதங்கள், பண்டிகைகள் மூலமாகவும் பல்வேறு நல்வாழ்க்கை முறைகளைத் தந்துள்ளதை அறியாமல் இருக்க முடியாது.

விரதம் என்பது கூட ஒரு வகைத் தத்துவமாகும். தனக்கு வரும் துன்பங்களைப் பொறுப்பதும் பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதும் விரதகாலக் கொள்கைகளாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்படியான உள்ளத்துறுதிக்கு உடல் கட்டுப்பட வேண்டும். உடலைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் உணவைச் சுருக்கி தெய்வ உணர்வைப் பெருக்க வேண்டும். விரதத்திற்கு உபவாசம் என்னும் பெயரும் உண்டு. உபவாசம் என்பது பட்டினி கிடப்பதில்லை. இறைவனை நெருங்கியிருத்தலாகும். இதனை "நிளநினைந் தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்" எனச் சுந்தரர் குறிப்பிடுகின்றார். அடிக்கடி விரதங்கள் நோற்பதனால் நாம் இறைவனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாக மாறுகின்றோம். அப்போது நாம் எமது வாழ்வை பயனுள்ள, பண்புள்ளதாக அமைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகுகின்றோம். இதே போன்று தான் நாம் கொண்டாடும் பண்டிகைகள் யாவும் எமது வாழ்விலே கலந்து சமயம் வேறு வாழ்வு வேறு அல்ல வாழ்க்கையோடு இணைந்தது தான் சமயம் எனக்கூறுகிறது. பண்டிகைகள் யாவும் இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும் அவ்வுணர்வு காரணமாக எமது சிந்தனை, சொல், செயல் என்பவை பரிசுத்தமடையவும் வழிகாட்டுகின்றன என்பது பெரியோர் வாக்காகும். விசேட நாட்களின் போது வீடுகள், சுற்றுப்புறங்களை துப்பரவு செய்தல், ஆலய வழிபாடு, புத்தாடை அணிதல், புதிய பாத்திரங்களில் சமைத்து இறைவனுக்கு நிவேதித்தல், உற்றார் உறவினரோடு உண்டு கலந்துரையாடி மகிழ்தல் ஆகியன நாம் கைக்கொள்ளும் வழக்கங்களாகும். இவையெல்லாம் எமது உள்ளத்து இருளை நீக்கி தூய்மையடைவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளன என்பதை நாம் என்றும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறாக எமது இந்து சமயம் தனிமனிதனாக ஆரம்பித்த கடமைகள் குடும்பமாக மலர்ந்து பின்னர் சமூகமாக விரிந்து உண்மையான சமய வாழ்வில் எம்மையெல்லாம் ஈடுபடுத்தி மனிதப் பிறவியின் நோக்கத்தை பெறும் வழிக்கு இட்டுச் செல்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

"*மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்*"

அருளம்பலம் குகராஜா
**இந்து சமய ஆசிரிய ஆலோசகர்,**
**பிரதேசக் கல்வி அலுவலகம்,**
**மூதூர்.**

**நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்**
**நிமலர் நீறணி திருமேனி**
**வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த**
**வடிவினர் கொடியணி விடையர்**
**கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்**
**அளப்பரும் கனமணி வரன்றிக்**
**குரைகட லோதம் நித்திலம் கொழிக்கும்**
**கோணமாமலை யமர்ந்தாரே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்து சமய வழிபாடு

"மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"

இலங்கை முதல் இமயம் வரை வாழ்ந்த பண்டைக்கால மக்கள் தமது பிறவியாகிய நோயை நீக்கி நித்திய ஆனந்தத்தை அனுபவிக்கவல்ல வாழ்க்கை நெறியே இந்து சமயமாகும். இதைச் சைவ சமயம், சிவ சமயம் என்றும் கூறுவர். அதாவது சைவம் என்றால் நிலையானது, அசைவம் என்றால் மாறக் கூடியது என்பதாகும். அதாவது இயற்கை நிலையான கொள்கைகளை உடையதென்பதும், சிறந்த செம்மையான சமயம் என்பது போதரும்.

இது காலங்கடந்து, சரித்திர அறிவு ஆராய்ச்சிகட்கு அப்பாற்பட்டது. குன்றுகள், மலைகள், குளங்கள், கடல்கள், நகரங்கள் சைவ சமயத் தொடர்பால் பரிசுத்தமடைந்தன. சிற்பக்கலை, கட்டிடக்கலை, இலக்கண, இலக்கியம், தத்துவம், தர்க்கம், அரசியல், வானசாஸ்திரம், வைத்தியம் என்பன வளர்ச்சி பெற்றன. இச்சமயம் என்றும் எவர்க்கும் கட்டாயமாகத் திணிக்கப்படாத ஒன்று. அன்பு, அருள், சாந்தம், இரக்கம், சேவையை அடிப்படையாகக் கொண்டமையால் நிலைபேறாக உள்ளது.

இந்தியாவுக்கு அப்பால் இருந்த மக்கள் சிந்து நதிக்கு இப்பால் இருந்த மக்களை இந்துக்கள் என அழைத்தமையாலே இப்பெயர் உண்டானது. இதன் நாகரிக வரலாற்றை பல சமயம் மொழி என்பன சிறந்து விளங்கின. இவர்கள் சைவ, வைணவ, கணாதிபத்தியம், கௌமாரம், சாக்தம், கபாலம் முதலான சமயங்களை அனுட்டித்து பிறவிச் சூழலில் அகப்படாது அடையும் நிலையை வகுக்கும் நெறி முறையைக் கொண்டது.

க.சிவக்கொழுந்து
சைவ அன்பர் - வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களைக் கொண்டவர் வைதீகர் என்றும், வேதங்களைக் கொள்ளாதவர் அவைதீகர், அசைவர் என்றும் கூறப்படும் சைவ சமயத்திற்கு திருநெறி, ஒருநெறி, பெருநெறி, சைவ (சிவ) நெறி, மேன்மைகள் சைவ நீதி எனப் பல பெயர்கள் உண்டு.

பிறவாயாக்கைப் பெரியோனாகிய கடவுளைக் கர்த்தாவாதத் தலைவராக உள்ளது. உயிர்கள், தலையாகிய உலக சம்சாரத்தில் ஈடுபட்டுத் துன்பத்தைச் சம்பாதிக்கும் முறையை தெள்ளிதில் விளக்கி இப்பிறவியிலும், மறுபிறவியிலும் இன்பமனுபவித்து நித்திய ஆனந்த வாழ்வை அடையச் செய்யும் நெறியாகும்.

ஏழாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தொல்காப்பியம், பண்டைக்கால இலங்கை இந்திய யப்பானிய பபிலோனிய நாகரிகங்களும் இதிலிருந்து கிளைத்துச் செல்வதை வரலாற்று ஆசிரியர்கள் நுணுகியறியக் கூடிய விதத்தில் இழையோடியுள்ளது. வட மொழியும், தென் தமிழுமாகிய இரு கண்களுடாக இது பற்றி அறியலாம்.

காலமென்பது கறங்கு போற் சுழன்று
மேலது கீழாய்க் கீழது மேலாய்
மாற்றிடும் தோற்றம்..

இது இலங்கை வரலாற்றில் அண்மைக்கால நிகழ்ச்சிகளுக்கூடாக அவதானிக்க கூடியதாகவுள்ளது.

கி.மு.1000ம் ஆண்டளவில் வாழ்ந்த அரேபியர்கள் கூடச் சிவ பக்தர்களாயிருந்து இலங்கையில் வர்த்தகக்குழு நகரம் அமைத்தமை நிறுவப்பட்டுள்ளது. பிரிட்டிஸ் கலைக்களஞ்சியத்தில் தென்னாபிரிக்க மன்னன் “சபா” தன்னாட்டுக் கப்பல்களைத் தென்னிந்தியாவில் செலுத்தியமை மூலம் அறியலாம். இஸ்லாம் மதம் உருவாக முன் அதாவது 1300 ஆண்டுகளுக்கு முன் அரேபியர் யாவரும் இச்சமயத்தையே பின்பற்றினர். இலங்கையில் கி.பி.150இல் மூன்று பிரபல வர்த்தக குழுக்கள் பிறநாட்டு கடல் கடந்த வர்த்தகத்தை நடத்தின.

அவையாவன: மகன, தமண, இயோகன என்பனவாகும். இதில் மகன சிவிதா மாந்தை சிவன் கோயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரவையின் 11வது பேராளர் அவைக் கூட்டத்தில் கல்முனை இ.கி.ச.மகாவித்தியாலயத்தில் பேரவைத் தலைவர் திரு.வ.முருகப்பன் தலைமைப் பேருரை ஆற்றுவதையும் மாநாட்டை ஆரம்பித்து வைத்த ஸ்ரீமத் சுவாமி அஜராத்மாநந்தாஜி அவதானிப்பதையும் காணலாம் (1994 பங்குனி)



பேரவையின் நிதிச் செயலாளர் திரு.சு.தில்லைநாதனிடம் தி.மா.இ.இ.பேரவையின் மதிப்பார்ந்த பொருளாளர் திரு.ந.ரவீந்திரன் பேரவைக்கான நன்கொடைப் பணத்தை வழங்குகிறார். (1995 ஆடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையாகவும், விவசாய வளம், நகர் வருவாய் பெற்றது காணக்கூடியதாய் உள்ளது. தமண சிவிதா தேவகண வர்த்தகக் குழு சந்திர சேகரராகிய சிவன் கோயில் ஆதனங்களுடன் கூடிய வருவாய் உள்ளதாயும், வருவாய் அமைப்பு, நிலபுலங்கள் அக்கோவிலுக்கு உரியதாயும் வழிபாட்டு முறையும் சைவ மதத்தை தழுவியது எனவும், கி.பி.1344இல், இபின்தூதா குறிப்பிட்டதை எத்தேசத்தவரும் அறிவர். இயோகன என்பது அரேபிய வர்த்தகக் குழு, இவர்களும் சைவ சமயிகளே.

சிங்களம் என்பது கறுவாவுக்கு சமஸ்கிருதத்தில் வழங்கப்பட்ட பயிரின் பெயரே அல்லாமல் அது ஒரு இனத்திற்குரிய பெயர் அன்று. கறுவாத்தீவு என்னும் பொருள்பட சங்கத(சமஸ்கிருத) மொழியில் சிங்களத்தீவீப என்பது இலங்கையின் பெயர் ஆகும். இவர்களும் சைவர்களே.

மஹா காளியை வழிபட்டதாலும் மகா காடாக இருந்தமையாலும் இலங்கையின் தென் பகுதியில் உள்ள காளி என்ற ஊர் உண்டானது. இவ்வூரில் இருந்த காளி என்ற தேவாலயத்தின் மடஆதினம் அமைத்து அவ்வூர் மக்கள் அப்பிரதேசத்தை காளி என்று அழைத்ததால் அப்பெயர் மருவி காலி என்று விரிவு அடைந்ததாக ஆர்.எல்.புறோஹியர் தெளிவாக விளக்கியுள்ளார். கோவில் அமைப்புகளில் ஞாழற்கோவில், கொகுடிக்கோவில், ஆலக்கோவில் என்பன வருகின்றன. கி.மு.246ல் பௌத்த தாபகமான ருவான்வெலிசய கட்ட இவ்விடத்தைத் தெரிவு செய்ய முன்பு ஆதி விருட்சமாக தெலும்பு மரமும் (Thelumbu Tree) காடும் சிவலிங்கமும் ரட்ணவல்லி என்ற (காளி) தாய்த்தெய்வ வழிபாடும் நிகழ்ந்துள்ளது. அனுராதபுர மக்கள் இத்தாய் தெய்வத்திற்கு பலியிட்டு வழிபட்டு வந்தனர். மகிந்ததேரர் ருவான்வெலிசாய தாபகம் கட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்த போது காளித் தெய்வம் கொள்ளை நோய் பரப்பினாள். அதனால் அவ்வூர் மக்கள் தெம்பு மரத்தை வெட்டவிடாது எதிர்ப்புத் தெரிவித்தனர். இவ்விருட்சத்தைக் கொண்ட இத்தலத்தில் இருந்த பெரிய லிங்கத்தில் ஞானவாக்குத் தோன்றி காணப்பட்டது எனவும் (இதன் பகுதிகள் பேணப்பட்டு வந்தமையை அறிகின்றோம்.) அவ்வாக்கின் பிரகாரம் விருட்ச தேவதைகள் ஆகிய காளி, சிவனுக்கு பலிகள் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரமும், காடும் அழித்து தாபகம் அமைக்கப்பட்டதை மரபுக்கதை அறியத் தருகின்றது. காலப்போக்கில் தமிழ் மக்கள் இத்தாபகத்தை அழிப்பதாக நெவில் தனது நூலில் கருதுகோள் கொடுத்துள்ளார்.

கோ என்றால் அரசன் அல்லது கடவுள் என்பது பொருள். கடவுளுக்கு நிகராக அரசன் இருக்க வேண்டுமென மனு நீதி கூறியபடி கடவுள் இருந்த இடம் கேள்விப்பட்ட இடம் கோகர்ணம் ஆகும். கடலில் செல்லும் மக்கள் தங்களையும் தங்கள் கப்பல்களையும் திரவியங்களையும் பாதுகாக்கும்படி கோகர்ணப் (திருக்கோணமலைப்) பெருமானை வழிபட்டதாக அறிகின்றோம். இதற்கு ஆதாரமாக லிஸ்பன் நகரில் உள்ள திருக்கோணமலை சிவன் கோயிலுக்குரிய கி.பி.2000 வருடத்திற்கு முன் கட்டப்பட்ட (போர்த்துக்கீசரால் பெறப்பட்ட) படம் சான்று பகருகின்றது. கி.பி.334 - 362 வரை ஆண்ட மகாசேனன் புத்த பகவானை அடியாராக மதிக்காது கடவுளாக்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் மூன்று சிவன் கோயில்களை அழித்தான். அவற்றுள் திருக்கோணமலை (சுவாமி மலைச் சிவன்) சிவன் கோயிலும் ஒன்றாகும். புத்தளத்திலிருந்து 14 மைல் கிழக்கே பெருமைக்கந்தர் (Perumakantha) என்ற திறந்த வெளிக் கோவில் குன்று உச்சியில் இருந்துள்ளது. வருணக் கோவில் காலப்போக்கில் மகா கதிரைக் கோவில்களின் எச்சங்களாவது காணக்கூடிய நிலையில் இன்றும் உண்டு. திரியாயில் திரிகந்த சேத்திய கட்டமுன் கந்தசுவாமி (மலைச்சுவாமி) இருந்ததை (கி.மு.4ம் நூற்றாண்டுக்கு முன் மகாசேனன் அழித்தமையை சி.எல்.நவரெட்ணத்தின் குறிப்பு புலப்படுத்துகின்றது.

சிவனொளிபாதமலைச் சிவ வழிபாட்டைப் பண்டைக் காலத்தில் இருந்தே எல்லோரும் அறிவர். பின்வந்த மதக் கொள்கையாளர்கள் ஒவ்வொருவரும் உரிமை பாராட்டினாலும் உண்மையில் குன்றின் உச்சியில் வழிபாடாற்றிய சைவ சமயிகனிள் ஆரம்ப நிலையுடன் தொடர்புடைமையை எவரும் தெள்ளிதிற் புரிவர் என்பது வெள்ளிடை மலைக்கூற்றாகும். இவை சைவர்களின் குன்றுச்சி வழிபாட்டை பற்றிக் கூறியவையாகும். இது போலவே கதிர்காம தெய்வ வழிபாடும் இவற்றுள் அடங்குவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து தீர்த்த விசேடங்கள் சைவ மதத்தில் மிக முன்னிற்கும் அற்புதமாகும். அபூர்வசக்தி வாய்ந்த கேணிகள், நீர்ச்சுனைகள், ஆறுகள், கடலுடன் நதிகள் கலக்கும் இடங்கள் பல வினைகள், தீரா நோய்கள் யாவற்றையும் நீக்க வல்லன. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் குதிரை முகம் பெற்றிருந்த சோழ இளவரசி மாருதப்புரவிவல்லி தீர்த்த அற்புதத்தைக் கேள்வியுற்று வந்து நீராடித் தன் குதிரை முகம் நீக்கப்பெற்றாள். நகுல முனியுடன் தொடர்புற்றிருந்த அர்ச்சுனன் வந்தும் நீராடியுள்ளான் இந்தக் கீரிமலையில் என்று மரபுக்கதை தெரியப்படுத்துகின்றது. (நகுலன் என்பது கீரி) வட இலங்கை கல்வெட்டும் இக்கூற்றை உறுதிப்படுத்துகின்றது.

இராவணனை வதம் செய்த இராமன் இராமேஸ்வரத்தில் லிங்க வழிபாடு ஆற்றி தீர்த்தமாடி பிரமகத்தித் தோஷத்தின் தாக்கத்தின் வேகத்தைத் தணித்தமை அறிந்ததே. லிங்கம் ஆணுறுப்பின் தோற்றம், பீடம் பெண்ணுறுப்பின் தோற்றம். இவ்விரண்டும் உலகத்தில் உயிர்கள் தூலவுடம்பு உருவாக மூல காரணம் ஆகையால் எவ்வுயிர்க்கும் பிரபஞ்ச உற்பத்தித் தொடர்பை ஏற்படுத்தும் முறை சிவலிங்க வழிபாட்டின் தத்துவம் என ஆராய்ச்சி பூர்வமாக நிறுவப்பட்டுள்ள உண்மையெனப் பகர்வர்.

இலங்கை மன்னன் இராவணன் சிவலிங்க வழிபாட்டை கடைப்பிடித்தவன். அவன் பெருமை அகில உலகமும் அறிந்த ஒன்றாகும். கிழக்கே மாமாங்கேஸ்வரர் கோவிலும் மேற்கே முனீஸ்வரன் கோவிலும் மனவாரி இராமலிங்கர் கோவிலும் இராமரால் வழிபடப்பட்ட இலிங்கேஸ்வரர் கோயில்கள் ஆகும்.

இயக்கவாவி (சிகிரியாவிற்கு அண்மையில்) உருத்திரபுரம் (கிளிநொச்சிக்கு அண்மையில்) சுடு மண்ணாற் செய்த லிங்கங்கள் காணப்பட்டமை சைவ சமயத்தின் பழைமை என மார்க்கஸ் பெணான்டோ தனது ஆராய்ச்சியூடாக அறுதியிட்டுக் கூறுகின்றார்.

கி.பி.150ம் ஆண்டளவில் டொலமி என்பவர் இலங்கையின் தென்முனையில் மாதுறையான (முற்கால மாத்தறை) தேவநகர என்ற தேவன்துறையில் வர்த்தகக் குழு என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகராட்சிக் குழு அமைத்து வழிபாடாற்றிய சந்திரசேகர சுவாமியாகிய லிங்கேஸ்வரர் எனக் குறிப்பிட்டுள்ளார். மஹாவம்சத்திற் கூறப்படும் சிவ பக்தனாகிய விஜயனும் இதையே புதுப்பித்தமை அறியக்கூடியது. இது கி.மு.5ம் நூற்றாண்டில் நிகழ்ந்தமை மனங்கொள்ளத்தக்கதாகும். இக்கட்டிடத்தையும் (கி.பி.1344இல்) கோவிலையும் பற்றிய சிறப்பம்சம் பற்றி இபின்பாதூதாவும் குறிப்பிட்டுள்ளார். கி.பி.1558இல் போர்த்துக்கீசர் இச்சிவலிங்கக் கோவில் இருந்த விதத்தையும், தாம் அழித்தமையையும் போர்த்துக்கீசத் தளபதி கொயூற்ரோ (Couto) குறித்துப் போந்துள்ளார். கோவில் செல்வம் நிர்வாகச் சிறப்புக்கள், அற்புதங்கள் யாவும் அங்கு அறியக்கிடக்கிறது.

1796ல் மக்கன்சி அவதானித்த சிவன் கோவில் இடிபாடுகளும் பின் சிங்கள இனத்தால் எழுப்பப்பட்ட கட்டிடம் பற்றியும் குறிப்புண்டு. 1800இல் யோன் வில்லியம் (Jonville) 2.5 அடி இலிங்கம் இருந்த அமைப்பையும் கோவிற் பூசாரி ஈசுவர சொரூபம் எனவும் குறிப்பிட்டு இதனருகில் ஒரு புத்த கோவில் உள்ளதாயும் குறிப்பிட்டுள்ளார்.

அசோகனின் தந்தையான பிந்துசாரன், விஜயன், தேவநம்பியதீசனின் தந்தையான மூத்தசிவன் இருக்கும் வரைக்கும் அவைதீக கொள்கையான புத்தநெறி இலங்கையில் பரவ முடியவில்லை. மகிந்தர் மூத்தசிவன் இறக்கும் வரைக்கும் 15, 20 வருடகாலம் காத்திருந்த பின்பே புத்த கொள்கைகளை பரப்பினான். யப்பான், இந்தோனேசியா, மலாய, சீனா, பர்மா, சீயம், சுமாத்திரா போன்ற ஏனைய நாடுகள் இந்து மதத்தையே தழுவியிருந்தன. லௌகீகத்தை பின்பற்றி மனுதர்மத்தை நிராகரித்த அவைதீக கொள்கைகளை பண்டைய காலங்களில் அவர்கள் நிராகரித்தனர்.

இந்துவாகப் பிறந்த சித்தார்த்தர் வைதீக முறைப்படி நாமகரணம், காது குத்தல், சௌளம் (முடி வெட்டுதல்) போன்ற பூர்வ கிரியைகள் யாவற்றையும் பின்பற்றியவர் ஆவார். அவர் பல பாதயாத்திரைகள் செய்ததுடன் இலங்கைக்கும் மூன்று முறை தெய்வ வழிபாட்டுக்காக வந்துள்ளமை அறியக்கிடக்கின்றது. இவர் ஓர் கிருஷ்ணனின் அவதாரம் ஆனபடியால் சைவ சமயியாகவும் ஞானம் பெற்ற ஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றமையாலும் அவருடைய போதனைகளையும், கொள்கைகளையும் இந்துக்கள் ஏற்று அவரை சைவ அடியாராக பேணினர். இன்றும் வழிபடுகின்றனர்.

கி.பி.2ம், 3ம் நூற்றாண்டில் ஏற்படுத்திய கொள்கை வழியாளர் அவரை அடியாரெனக் கருதாமல் குரு என்ற ரீதியான தன்மையைக் கடந்து கடவுளின் தன்மையைக் கொடுத்து பிறவாயாக்கை பெரியோனாகிய கடவுளின் தானங்களை அழித்தமையே புத்த கொள்கைக்கு பதில் பௌதீக கொள்கைக்கு மாற்றம் கொடுப்பது ஆகும். புத்தம் பௌத்தம் ஆகியது. அதாவது ஞானம் என்ற கருத்து மாறி மாயாவாதமும், லௌகீக இச்சைப்படும் தன்மையும் ஏற்பட வழிவகுத்தது. இதனால் கொலை, களவு, பிறபொருள் அபகரித்தல், வியபிசாரம், சமய துஷ்பிரயோகங்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது. நாஸ்திக கொள்கை பரவி நாசகார அழிவுகள் ஏற்பட வழியமைக்கப்பட்டது.

இறுதியாக சைவ சமயிகள் யாவரும் மனுதர்மசாஸ்திரத்தை பின்பற்றி பஞ்சமா பாதகங்களை நீக்கி தம்தம் தொழில்களை வரன் முறையாக இயற்றி, அன்பு, கருணை, ஈகை போன்ற நற்குணங்களுடன் தம்தம் இயல்புக்கு ஏற்ற பிரம்மச்சரியம், இல்லறம், இயம, நியம முறைப்படி வாழ்க்கை நடத்தி நித்திய இன்பம் அனுபவிப்பதுடன் ஏனையோரையும் நித்திய இன்பப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

உரிய முறைப்படி பூர்வக் கிரியைகளையும், விரதங்களையும், நித்திய அனுஷ்டானங்கள், சூரிய வழிபாடு, தெய்வ வழிபாடு, மதகுருமார், தாய், தந்தை, குரு பேணல் பொய், களவு, கொலை, காமம், மதுபானமாகியவற்றை நீக்கி, பசு நல்வினை, பதி நல்வினை ஆற்றி சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளைப் பின்பற்றி அன்புடன் வாழப்பழக வேண்டும்.

மகாசேனன் தமிழரை அழிக்கவில்லை. கோயில்களைத்தான் அழித்து புத்தரைக் கடவுள் ஸ்தானத்திற்கு உயர்த்தினான். ஈற்றில் தனது மகனால் விலங்கிடப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, இருட்டறையில் கிடத்தப்பட்டு, உயிருடன் துடிக்கத்துடிக்க கட்டிடத் தூணில் கட்டப்பட்டான். அவனால் நீர் நிலைகள் புதுப்பிக்கப்பட்டும் செய்த தீவினை அவன் ஆன்மாவை இறுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்த்தியதாக ஆர்.எல்.புறோகியர் குறித்துக் காட்டியுள்ளார்.

அறியாதார்க்கும் அன்பு காட்டி இன்பமாக வாழ்வதற்கு சைவ சமயிகள் முன்வர வேண்டும்.

"தென்னாடுடைய சிவனைப் போற்றுக
எல்லோரும் இன்பமாய் வாழ்க
இன்பமே சூழ்க"

சுபம்

பிற்குறிப்பு:

கி.பி.1522 வரை ஒரு மிகப் பெரிய சிவாலயம் வானளாவிய சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமையப் பெற்று அவ்வூர் மக்களால் பேணப்பட்டு வந்தமையையும், சிறந்த முறையில் கண்டிப் பிரதேசத்தில் திகழ்ந்தமையையும் போர்த்துக்கீசர்கள் குறிப்பிடுகின்றனர். தினமொன்றுக்கு 2000 சிற்பாசாரியர்கள் வேலை செய்து அதன்படி பார்த்தாலும் 20 வருடம் வேலை செய்தும் (அதாவது 7300 நாட்கள்) அவ்வளவு சிற்ப வேலையைச் செய்து தான் அச்சிவாலயம் கட்டி முடிக்க முடியுமென்றும், அத்தகைய பிரமாண்டமான சிவாலயத்தைத் தாம் தகர்த்து அழித்ததாக எழுதி வைத்துள்ளனர். பறங்கிக்காரர் பாராட்டுமளவிற்கு இலங்கையின் மத்திய பிரதேசத்தில் சைவ வழிபாடு திகழ்ந்துள்ளது.

இராவணனின் ஆட்சியின் பின் சிதைந்திருந்த கோவில்களையும், திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் புதுப்பித்து குளங்களையும், கோட்டங்களையும் அதாவது கந்தளாய்க் குளத்தையும் கலியுக வருடம் 512இல் குளக்கோட்டன் என்ற ஓர் அரசன் திருத்தியது என்றும் மறக்கமுடியாததும் உண்மையானதுமாகும். கலியுகம் 512ம் வருடம் என்பது 4570 வருடத்திற்கு முந்திய ஆண்டாகும் அல்லது கி.மு.2572ம் ஆண்டைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# எங்கும் நிறைந்த....

(திருமலை சுந்தா)

எனக்கு அவர் சொல்வது சரியாக படவில்லை. கோவில், திருவிழா, கொண்டாட்டங்கள் இவைகளில் இருந்து அவர் மாறுபட்டவராக ஏன் தெரிகின்றார்? கோவில் கதவுகள் மூடப்பட்டிருக்கும் வேளை ஆனந்தமாக சுவாமி தரிசனத்திற்கு பேவார். திருவிழா காலங்களில் சுவாமி வெளி வீதி வந்து அருள்பாலிக்கும் வேளை அந்த பக்கமே நிமிர்ந்து பார்க்காமல் தன் வேலை வெட்டிகளோடு இருந்து விடுவார்.

ஆண், பெண், குமர், குட்டி தெரியாமல் முட்டி, மோதி, இடி, உதைபட்டு இப்படியான தரிசனம் தேவையா? என குதர்க்கம் பேசுவார். இதுக்குப் போனா பக்தியோ, பரவசமோ வராது வேறதான் வருமென பச்சை, பச்சையாக சொல்வார். எனக்கு காதுகளை இறுகமூட வேண்டும் போல் இருக்கும்.

“உங்கட வளர்ப்பு இப்படி, உங்களுக்கு இப்படி சொல்லித்தந்து வளர்த்திருக்கினம். எங்களுக்கு அப்படி இல்லை என்று நான் ஆத்திரமாக பேசினால் அவருக்கு ஆத்திரமே வருவதில்லை. ஒரு மாதிரி பார்த்து சிரிப்பார்.

“பொடிக்கு படிப்பு காணாது” என்று சில வேளை மட்டும் மெதுவாகச் சொல்வார். அவர் “படிப்பு” என்று எதைக் குறிப்பிடுகிறார் என்று யோசித்துப் பார்ப்பேன். யோசித்து பார்த்து தெரியாது போனாலும் கேட்க மாட்டேன். ஏன் கேட்க வேண்டும் என்ற திமிர் என்னுடன்.

சமுதாயத்தோடு ஒத்துப்போகாத அவரின் குதர்க்கம், செயல் என் திமிரை நீர் ஊற்றி நாள் தோறும் வளர்த்தா வருகின்றது?? இவர் சொல்றதை சொல்லட்டும் என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்திக்கடனை காளி ஆச்சிக்கு கொடுத்துப் போடவேணும். என் முடிவான முடிவில் இருந்து என்னால் அணுவளவு கூட அசைய முடியவில்லை.

"ஏன் நேர்த்திக்கடன் கடவுளுக்கு லஞ்சமா? அப்படி செய்வன், இப்படி செய்வன் என்றால் தான் கடவுள் செய்யுமா? நீ நினைக்கிற கடவுள் எங்கட மனிதர்களைவிட மோசம் போல...?


கதைக்கிறதுக்கு கூட அளவு, நிறை வேண்டும். நாகூசாது ஏன் தான் இப்படி கதைக்குது. நேர்த்திக்கடன் என்பது கடவுளுக்கு நாம் பின் பக்க வாசல் வழியாக கொடுக்கும் லஞ்சமா? கடவுளை நேர்த்திக்கடன் என்ற பேரில் குளிர்த்தி வைத்தால் தான் எமது காரியம் அல்லது காரியங்கள் நடைபெறும் என்பதில் ஏன் அவருக்கு மன விரிச்சல்? அப்படி ஏன் கோபம்??

"இஞ்ச பார்...... தெய்வங்களுக்கு கொண்டு போய் இந்த சேலையை சாத்திரதை விட்டுட்டு இல்லாத ஒரு ஏழைப் பெண்ணுக்கு கொடு...... ஆயிரம், ஆயிரம் தெய்வங்களுக்கு சேலைகள் சாத்திரதிற்கு சரியாகும்......."


இப்படித்தான் விதண்டாவாதம் என்னுடன் செய்தார். எனது மகள் பெரியவள் ஆனதும் அந்த அருள் பாலிக்கும் அம்பாளை நினைத்து தாயே உனக்கு என் தகுதிக்கு ஏற்ப ஒரு சேலை சாத்துவேன் என்பது பிழையான செயலா? அல்லது உலகில் இந்து சமுதாயத்தில் இல்லாத ஒன்றா?? என் நன்றியை அந்த தெய்வத்திற்கு ஒரு சேலை வடிவில் விரும்பியதற்கு இவர் போயும், போயும்; எத்தனை, எத்தனை குதர்க்கமான குத்தல் கதைகள் சொல்கிறார். அழுகைதான் வந்தாலும் அந்த அழுகையின் காரணத்தை என் பிள்ளைகள் அறியக்கூடாது என்ற எனது மனவைராக்கியம் என் கணவர் என்ற அந்த ஆணின் அற்ப புத்திக்கு..... மௌனத்தை சாதிப்பதை விட வேறு வழி இல்லாது நான் தவித்த தவிப்புகள்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரவையின் முன்னாள் தலைவர் திரு.ம.சிவநேசராசா பேரவையின் நிருவாகிகளோடு உரையாடுகின்றமை (1993 ஜனவரி)



பேரவையின் பணிமனைத் திறப்பு விழா நிகழ்வு (1994 பங்குனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தடவைகள்...... என் மனம் அவரின் வார்த்தைக்கு கட்டுப்படவே மறுத்து மறுத்து..... அவரை வெறுத்து..... வெறுத்து தான் பார்த்தது.

நான் எத்தனை தடவைகள் அவரை இப்படிப்பட்ட மன உள்புகைச்சல் சண்டைகளுக்காக வெறுத்து, வெறுத்து பார்த்தாலும்..... ஊகும்..... அவர் என்னோடு ஒரு நாள் கூட முட்டி மோதி பலத்த சண்டை பிடித்து என் வாயை திறக்க வைத்து...... அடி மனதில் குடைந்து..... குடைந்து.... உருளும் என் வார்த்தைகளை வெளிக்கொழை.... வெளிக்கொழை..... முடியாது தவிக்கும் போது..... தவிக்கும் போது..... அவர் சொன்னதுகளை மாறி.... மாறி..... திருப்பி..... திருப்பி...... யோசிப்பதை தவிர.....

பத்து நாட்களாக முடிவெடுக்க திறன் அற்று..... அற்று..... முடிவெடுக்க என்னால் முடியாது.... முடிவெடுக்க..... அழுகையோடு என் காளி ஆச்சியிடம் ஆயிரம் மன்னிப்பு கோறியே அவர் விரும்பிய அந்த பெண்ணைத் தேடினேன்.

இப்ப நினைச்சாலும்.... நான் நேர்த்தி வைத்த இந்த சேலையை காளி ஆச்சிக்கு கொடுத்து போடுவன்.... ஆனா.... இது..... உங்கள மட்டுமல்ல அதனால் என் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் மீறி கை, கால் முடியுமென்பதால்..... உங்களோட நான் ஒத்துப்போறன் நான் ஏமாற்றினதிற்கு காளி ஆச்சி எனக்கே தண்டனை தரட்டும். இப்படி விக்கி நான் அழுது சொன்ன போது.....

அவரின் முகம் கலவரமடையாது மிகவும் பிரகாசமாகி.... அந்த ஒளி பொருந்திய கண்களால் அப்படியே என்னை அள்ளிப் பருகி..... அணைத்து......

அம்மா..... நான் உன்னை எந்த தெய்வ தண்டனைக்கும் உள்ளாக்க மாட்டேன். அந்த தெய்வத்திற்கு எது பிழை.... எது சரியென்பது தெரியும். பிழையென்றால் அந்த தண்டனையை நானே ஏற்பேன்.... நீ..... நீ.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான்....... இப்படித்தான்....... நான் எல்லாக் காரியங்களுக்கும் அவரின் சொல்லோடு ஒத்துப் போகும் போது.... போகும் போது கண்ணீர் மல்க.... கண்ணீர் மல்க.... நின்ற இடத்தில் நின்றே என்னை கட்டி அணைத்து ஆனந்தப்பட்டு...... ஆனந்தப்பட்டு......

எக்காரியங்களுக்கும் எந்த தவறுமே விடாது தெய்வத்திற்கு சமமாக..... என்மேல்....... என்மேல்...... ஆனந்திக்கும் இவருக்காக....... இவருக்காக..... அவர் விரும்பியபடி..... நான்.... நான்..... மாவிடிக்கும் பூரணம் நினைவுக்கு வந்தாள். காளி ஆச்சியை நினைத்து அவளிடம் அந்த நேர்த்தி சேலையை நீட்டிய போது அவள் அதிர்ந்தே விட்டாள். அவள் இத்தனை பெறுமதியான சேலையை வாழ்நாளில் கண்டிருப்பாளோ என்னமோ!!!

"அம்மா.... நீங்க......"

"இது ஐயா சொன்னது...... உன்னைப் போன்ற நல்ல பெண்ணுக்கு கொடுக்கச் சொல்லி....." அவரை முன்னால் நிறுத்தி நான் பின்னால் நின்று கொண்டே அவரின் வார்த்தைகளுக்கு பதில் சொன்னேன். அவள்..... பயந்து பயந்தே வாங்கினாள்.

ஒரு கிழமை போய் இருக்கும்...... மூன்றாவது வீட்டு சரஸ்வதி அக்கா ஒரு பார்சலோடு என் வீட்டுக்கு வந்து..... கொண்டு வந்த பார்சலை பிரித்து..... பிரித்து..... நீட்டிய போது "ராசாத்தி.... இந்த சேலையை ஒருக்கா பாரு... இவள் பூரணம் கொண்டு வந்தவள்.... ஆயிரத்து ஐநூறு என்கிறாள். கொடுக்க முடியுமோ பாரு....." என்று வார்த்தைகளை கொட்ட முதலே.... கொட்ட முதலே.......

எனக்கு எல்லாமே புரியத் தொடங்கி விட்டது. இந்த பாவி மனுசன் தான் கண்முன் தெரிந்தார்.

"எனக்கு தெரியும்..... எனக்கு தெரியும்..... இவளுக்கு உடுக்க கொடுத்தடி..... அவள் விற்க அல்லவா திரியிறாள்......."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தெழுந்த வார்த்தைகள் வாய்க்குள் வந்து நாக்கு அசைவின் மறுப்பால் அப்படி.... அப்படியே தனித்து..... தனித்து... என்னை மௌனமாக்கிய போது...

"என்ன ராசாத்தி..... நீ பேசாமல்..... ஏன் இந்த சேலை..... கூடாதேடி...." அவரை, என்னை...... பூரணத்தை..... சரஸ்வதி அக்காவிடம் எப்படி..... எப்படி காட்டிக் கொடுக்க முடியும்?

முட்டி, விழுங்கி..... வார்த்தைகளை இனிப்பாக்கி..... சரஸ்வதி அக்காவை அனுப்பியது தான் தெரியும்..... பிறகு..... பிறகு......

நட்ட மரவள்ளிக்கு மண் குமித்து..... ஜம்பு மரத்திற்கு தண்ணீர் கட்டி..... கப்பல் வாழை மரத்திற்கு வைத்தியம் பார்த்துக் கொண்டிருந்த அவரிடம்...... அவரிடம்...... என் அடி மனதில் இருந்து வார்த்தைகள்...... வார்த்தைகள்........ அடிக்கடி திருக்கோணமலை துறைமுகத்தின் கடற்பரப்பில் இருந்து எழும் சண்டைப் படகுகளின் வெடியோசைகள் மேல் வெடியோசைகள் போல.....

இதற்கும் இந்த மனுசன்...... ஏன் தான் இப்படி சிரிக்கிதோ? ஏதும் பைத்தியமோ! சூடு சொரணை இல்லையோ!!

"உங்களுக்கு சொல்லுறதை விட ரோட்டில போர எருமை மாட்டுக்கு சொல்லலாம்...." என முடித்த போதும்........

மிக.... மிக..... ஆறுதலாக........ "அம்மா..... ஜம்பு பூக்க தொடங்கி விட்டது.... இனி காய்க்கும்..... வெளவால்களும் வரும்..... காவல் இருக்க வேண்டும்....." என சொல்லி..... என்னை குடைந்து..... குடைந்து பார்த்து..... என் ஆத்திரத்தை..... அன்று முழுதும் ஒளித்து..... ஒளித்தே அழுது தீர்த்தேன்.

என் அழுகை தீர்ந்த..... போது..... பூரணம் தான் முடிவாக வந்து நின்றாள்...... என் கோபமெல்லாம் அவரிடம் இருந்து பூரணம் மேல்..... மொய்த்த போது.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி அக்கா வந்து போன அடுத்த நாளே பூரணம் "மாவிடிக்க எப்போது" என கேட்க வீடு தேடி வந்திருந்தாள். அவள் மேல் மொய்த்த ஆத்திரத்தை அப்படியே கொட்டி விடாது மிகவும் பக்குவமாக பேசத் தொடாங்கினேன்.

இந்த பக்குவமாக பேசும் வார்த்தை, ஜாலம் எல்லாம் என்னுடையது அல்ல, எல்லாம் அவரின் குரு போதனை தான். அந்த அமைதி..... கோபத்தை புன்சிரிப்பாக மாற்றும் ஒரு வாதம்..... அடிக்க வந்தவனை தன் பக்கத்தில் வீழ்த்தும் அந்த திறன்..... அத்தனையையும் என் ஞாபகத்திற்குள் வைத்து..... வைத்து..... பூரணத்தை நெருங்கினேன் வார்த்தைகளால்.

"பூரணம் எனக்கு பொய் சொல்லுவியா?"

"இல்லை அம்மா, ஏன் இப்படி கேக்கிறீங்க!"

"நான் தந்த சேலை உனக்கு உடுக்கச் சொல்லி..... அதை நீ சரஸ்வதி அக்காவுக்கு விற்றுப் போட்டது உண்மையா.....?"

பூரணம் சிறிது நேரம் பேசவில்லை. என்னையே உற்றுப் பார்த்தாள். பொய் சொல்ல யோசிக்கிறாளோ, என் உள்மனம் நினைத்துப் பார்த்தது.

அவள் "ஆ"மென்று தலையாட்டினாள். கண்களில் கண்ணீர் மல்கி..... மல்கி..... வார்த்தைகள் விசும்பின. இஞ்ச பார் நீ செய்தது எவ்வளவு பிழையான காரியமென்று உனக்கு தெரியுமா? என்ர மகள் பெரியவளானதுக்கு காளி ஆச்சிக்கு ஒரு சேலை சாத்திரதாக நேர்த்திக்கடன் வைச்சன். அதுக்கு வாங்கினது தான் உனக்கு தந்த சேலை.

ஏழைப் பெண்ணின் மானம் காத்தால்..... அது ஆயிரம் தெய்வங்களின் அருளுக்கு சமன் என்ற இவரின் விதண்டா வாதத்தால்..... விருப்பப்படாமலேயே அதை உனக்கு நான் தந்தன்..... நீ..... என்னடா என்றால் நான் நினைத்த படியே..... அதை விற்று காசாக்கி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வார்த்தைகள் தொடரா வண்ணம் அவள் அழுகை என்னை மறித்தது. ஆழமாக அவளைப் பார்த்தேன். அவள் வயிறு குலங்க குலுங்க..... அழத் தொடங்கினாள். அவளிடம் இருந்து வார்த்தைகள் வெளிவர தயங்கின.

"அவள் பேச மாட்டாள், நான் பேசலாமா.....?" புத்தக மொன்றுடன் பேசி, மகிழ்ந்து கொண்டிருந்த அவர் தான் .....

இவர் எப்போது வந்தார். காலை தானே அலுவலக அலுவலாக கொழும்புக்கு போனவர். அட பூரணத்தை தன் பூதாகரமான உருவத்தால் அப்படி மறைத்து..... தன் உருவத்தை பெரிதாக்கி..... பெரிதாக்கி..... இவர்..... எப்போது தான் இந்த மாயவித்தையை கற்றார்?

"அம்மா..... நீ இவள்ட மானத்தை மறைக்க சேலை கொடுத்ததாக நினைக்கிறாய். அது சரி.... ஆக கந்தையோடும், கசங்கல்களோடும் வாழ்ந்த இவள் நீ கொடுத்த "ஆறாயிரம்" பெறுமதியான சேலையை உடுப்பதென்றால் முடிகின்ற காரியமோ.....?? அவளுக்கு பிரச்சனை உன் சேலையை உடுப்பது மட்டுமல்ல..... அதைவிட பெரிசான பிரச்சனை பசிக்கின்ற அவளின் வயிறு..... இந்த சேலையால் கிடைக்கும் பணத்தில் இருந்து அவளின் வயிறு பசியாறும் என அவள் நினைக்கும் போது நீ கொடுத்ததை எண்ணி கோபப்பட்டு, சினந்து அவளை - நீ வேடிக்கை பார்ப்பது.....

உற்று, உற்று பார்க்கின்றேன். பூரணம் அழுகின்றாள். அவளின் அழுகுரலில் அவளின் அந்த தோற்றத்தில் அவர், அவர் தான்...

"அம்மா இறைவன் எங்கும் நிறைந்தவன். இந்த
பசி இருக்கே அதுவும் எங்கும் நிறைந்தது தான்;
அது ஆண்டவனின் திருவுருவம் தான்"

பூரணம் பேசவில்லை. அவர் அவளில் நின்று தான் பேசுகின்றார். பசி அடங்கும் போது இறைவன் திருப்தி அடைகின்றான். அது பொங்கி எழும் போது..... எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த அது..... அந்த பசி..... உன் சேலையால்... அந்த தெய்வங்கள், கோயில்களில் இருக்காது..... உன் முன்னால் சத்தியமாக தேடி வரும் பார்..... நீயே..... பார்.....

பூரணம் அழுகிறாள். அவளிடம் வார்த்தைகள் இல்லை.
ஆனால் ..... ஆனால் ..... அவளின் உருவம் .....
என் கண்களை உருட்டி..... உருட்டி..... பார்க்கின்றேன்
பூரணத்தின் உருவம் ..... அவளின் உருவம் .....
அந்த காளி..... ஆச்சி..... அந்த காளி ஆச்சி.....
இருந்த நான் எழ முற்படுகின்றேன். என்னையறியாமல்
என்னை மறந்து என் கைகள் .....
"அம்மா..... அம்மா..... நீங்கள்..... நீங்கள் ....."
அது பூரணத்தின் குரல் அல்ல.....
என்மகள் பெரியவள் ஆகினதற்கு காளி ஆச்சிக்கு
எந்த சேலை சாத்த நினைத்தேனோ..... அந்த..... அதே
சேலையோடு.....
எங்கும் நிறைந்த அவள்... என்னோடும் நிறைந்து நிறைந்து....

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி ஐக்கிய சமய சம்மேளனத் தலைவர் வண.அசிஜிதேரர் அவர்களுக்குப் பேரவையினர் விரிவாக விளக்குகின்றார்கள். பேரவையின் வட பகுதி இணைப்பாளர் திரு.செ.கமலதீபன் (கண்ணாடியுடன் இருப்பவர்) பேரவையின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு.ப.சிவலோகநாதன் தலைமைச் செயலாளருக்கு அருகிற் காணப்படுகின்றார். (1996 கார்த்திகை)



வெளிக்கள வருகையின் போது பேரவை நிருவாகிகள், முகுத்தன்னைத் தோட்ட தெபட்டான் தமிழ் வித்தியாலய மாணவர்களுடன் காணப்படுகின்றார். (1995 ஐப்பசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து இளைஞர் மன்றங்களின் பணிகள்

## யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வன்செயல் சம்பவங்களினாலும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாலும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர் மன்றங்களின் பணிகளை குறிப்பிட முடியாத நிலையில் உள்ளோம். எனினும் பேரவையின் பத்தாவது பேராளர் அவைக் கூட்டத்திற் பங்குபற்றிய யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர் மன்றங்களின் விபரம்:

1. இந்து இளைஞர் மன்றம் திருநெல்வேலி
2. இந்து இளைஞர் மன்றம் தெல்லிப்பழை
3. இந்து இளைஞர் மன்றம் கொழும்புத்துறை
4. இந்து இளைஞர் மன்றம் சாவகச்சேரி
5. இந்து இளைஞர் மன்றம் சங்கத்தானை
6. இந்து இளைஞர் மன்றம் சரசாலை
7. இந்து இளைஞர் மன்றம் கைதடி
8. இந்து இளைஞர் மன்றம் உடுவில்
9. இந்து இளைஞர் மன்றம் சுன்னாகம்
10. இந்து இளைஞர் மன்றம் வட்டுக்கோட்டை
11. இந்து இளைஞர் மன்றம் அராலி
12. இந்து இளைஞர் மன்றம் பண்டத்தரிப்பு
13. இந்து இளைஞர் மன்றம் பருத்தித்துறை
14. இந்து இளைஞர் மன்றம் கரவெட்டி
15. இந்து இளைஞர் மன்றம் நல்லூர்
16. இந்து இளைஞர் மன்றம் எழுதுமட்டுவாழ்
17. இந்து இளைஞர் மன்றம் மூளாய்
18. இந்து இளைஞர் மன்றம் அல்லையம்பதி
19. இந்து இளைஞர் மன்றம் கொய்யாத்தோட்டம்
20. இந்து இளைஞர் மன்றம் மண்டைதீவு
21. இந்து இளைஞர் மன்றம் உரும்பிராய்
22. இந்து இளைஞர் மன்றம் சுழிபுரம்
23. இந்து இளைஞர் மன்றம் புளியங்கூடல்
24. இந்து இளைஞர் மன்றம் வேலணை
25. இந்து இளைஞர் மன்றம் புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வந்த இந்து இளைஞர் மன்றங்களை ஒருங்கிணைத்து செயற்பட்டு வந்த இணைப்பு அமைப்பே யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆகும். இப்பேரவை நல்லூரில் தனது அலுவலகத்தை அமைத்துப் பல்வேறு வகைப்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

## இந்து இளைஞர் மன்றங்களின் பணிகள்

### திருக்கோணமலை மாவட்டம்

1. திருக்கோணமலையில் இந்து மயானம் பராமரித்தல், அறநெறிப் பாடசாலை நடத்தல், இளைஞர் நலண்பேண் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் என்பவற்றுடன் வன்செயலிற் தீக்கிரையாக்கப்பட்ட திருக்கோணமலை நகரின் நுழைவாயிலான மடத்தடிச்சந்தியில் உள்ள மன்ற அலுவலகத்தை புனர்நிர்மாணஞ் செய்யத் திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றம் முயற்சித்து வருகின்றது.
2. இலிங்கநகரில் அருள்மிகு கோணலிங்கப் பிள்ளையார் ஆலயத்தைச் சிறப்புறத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தி இலிங்கநகர் இந்து இளைஞர் மன்றம் ஒழுங்காகப் பராமரித்து வருகின்றது.
3. உவர்மலையில் சைவ ஆலய சரியைத் தொண்டையும் சிரமதானப் பணிகளையும் இளைஞர் தலைமைக் தகைமைக்கான பணிகளையும் உவர்மலை இந்து இளைஞர் மன்றம் மேற்கொள்கின்றது.
4. அன்புவழிபுரத்தில் அறநெறிப் பாடசாலையை ஒழுங்காக நடத்தி வருதலும், பாலர் பாடசாலை நடத்திப் பணிபுரிதலும் இந்து சமய மறுமலர்ச்சி பணிகளிலும், அன்புவழிபுரம் இந்து இளைஞர் மன்றம் முயன்றுவருகின்றது.
5. செல்வநாயகபுரத்தில் சமூகப் பயிற்சியாளர்களை அணிதிரட்டியும், ஆலயங்களில் பல்வேறு விதமான சமயப் பணிகளிலும், செல்வநாயகபுரம் இந்து இளைஞர் மன்றம் செயற்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பாலையூற்றில் அறநெறிப் பாடசாலை நடத்தியும், பாலர் பாடசாலை நடத்தியும் சமுதாய ஒற்றுமைக்கான நடவடிக்கைகளிலும் பாலையூற்று இந்து இளைஞர் மன்றம் உழைத்து வருகின்றது.

7. கரடிப்பூவலில் அருள்மிகு பாலமுருகன் ஆலயத்தை திருப்பணி செய்விப்பதிலும், ஏழை மாணவர்களுக்கு உதவுவதிலும் கரடிப்பூவல் இந்து இளைஞர் மன்றத்தினர் செயற்பட்டு வருகின்றனர்.

8. கிண்ணியாவில் அருள்மிகு ஊற்றடிப் பிள்ளையார் ஆலயத்தைப் பரிபாலித்தும், காசிநாதர் அறநெறிப் பாடசாலையை நிர்வகித்தும், கிண்ணியா இந்து இளைஞர் மன்றம் செயற்பட்டு வருகின்றனர்.

9. ஆலங்கேணி ஆலய பரிபாலன சபையினருக்கு உறுதுணையாகவும், இளைஞர்களின் வழிகாட்டியாகவும், ஆலங்கேணி இந்து இளைஞர் மன்றம் விளங்குகின்றது.

10. ஈச்சந்தீவில் விநாயகர் படிப்பகத்தை நிர்வகித்தும், ஆலய பரிபாலன சபையினருக்கு உதவியாகவும், இளைஞர்களுக்கு உந்து சக்தியாகவும், ஈச்சந்தீவு இந்து இளைஞர் மன்றம் மிளிர்கின்றது.

11. தம்பலகமத்தில் விவசாயிகளுக்கு உறுதுணையாகவும் உதவியாகவும் விளங்குவதோடு இந்து சமய மறுமலர்ச்சிப் பணிகளிலும் ஈடுபடுவதுடன் பாலர் பாடசாலையையும் தம்பலகமம் இந்து இளைஞர் மன்றம் நடத்தி வருகின்றது.

12. இறால்குழியில் ஆலய பரிபாலனத்தில் ஊரவர்க்கு உதவியும் இளைஞர்களிடையே தொழிற் பயிற்சிகளை ஊக்குவித்தும் ஊரவரிடையே தன்னம்பிக்கையை வளர்ப்பதிலும் இறால்குழி இந்து இளைஞர் மன்றம் பணியாற்றி வருகின்றது.

13. மூதூரில் அமரர் வசந்தகுமார் நினைவு நூலகத்தை நிர்வகித்தும் அறநெறிப் பாடசாலையை நடத்துவதற்கு இந்து மகளிருக்கு உதவியும் நவரெட்ணம் மண்டபத்தைப் பராமரித்தும், மூதூர் இந்து இளைஞர் மன்றத்தினர் செயற்பட்டு வருகின்றனர்.

14. மூதூர் - பாலைநகரில் பிரதேசச் சபை ஊழியர்களுக்கான குடிமனை அமைப்பிற்கும், தொழில் முயற்சிக்கும், இந்து கலாசார ஆலய சீர்திருத்தத்திற்கும், பாலைநகர் இந்து இளைஞர் மன்றம் சீரிய பணியாற்றி வருகின்றது.

15. பட்டித்திடலில் மன்றத்திற்கெனச் சொந்தமான பணிமனை அமைத்தும் கிராமத்தின் சமய சமுதாய எழுச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்று செயற்பட்டும் பாலர் பாடசாலை, தொழிற் பயிற்சி முதலியன நடத்தியும், ஓர் முன் உதாரணமுள்ள மன்றமாக நிர்வகித்து பட்டித்திடல் இந்து இளைஞர் மன்றம் வீறுடன் செயலாற்றுகின்றது.

16. பெரியவெளியில் அருள்மிகு ஸ்ரீ கதிரேசப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையாருக்கு உதவுவதோடு கிராமத்தின் சமய முன்னேற்றத்திற்கும் எழுச்சிக்கும் பெரியவெளி இந்து இளைஞர் மன்றம் காத்திரமான பங்களிப்பை செய்து வருகின்றது.

17. மல்லிகைத்தீவில் பாலர் பாடசாலையை நடத்துவதோடு சமயப் பணியினையும் மல்லிகைத்தீவு இந்து இளைஞர் மன்றம் விருப்புடன் ஆற்றி வருகின்றது.

18. கந்தளாயில் பாலர் பாடசாலையை நடத்துவதோடு ஆலயப் பணியினையும், மக்கட்கான நலன்பேணும் பணிகளையும் இளைஞர்களுக்கான இன்தமிழ் பணியினையும், கந்தளாய் இந்து இளைஞர் மன்றம் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆற்றிவருகின்றது.

19. கந்தளாய் பேராறில் இராஜராஜசோழ மன்னனால் பரிபாலனஞ் செய்யப்பட்ட பேராறு சிவன் கோவில் பரிபாலனத்திற்கு உதவுவதிலும், தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிசமைப்பதிலும் சமய மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதிலும் கந்தளாய் பேராறு இந்து இளைஞர் மன்றம் உழைத்து வருகின்றது.

20. திருக்கோணமலை மாவட்டத்தின் வடக்கெல்லையாக விளங்கும் வெருகலம்பதியாரின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஈச்சிலம்பற்றையில் பாலர் பாடசாலை நடத்துவதோடு ஆலயப் பணிகள், சமுதாயப் பணிகள், பொருளாதார அபிவிருத்தி கிராம மேம்பாட்டுப் பணியினை ஈச்சிலம்பற்றை இந்து இளைஞர் மன்றத்தினர் ஈச்சிலம்பற்றையிலும் ஏனைய கிராமங்களிலும் நெறிப்படுத்தி வருகின்றனர்.

## திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை

திருக்கோணமலை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற ஐம்பத்தைந்து இந்து இளைஞர் மன்றங்களையும் ஒருங்கிணைத்து வழிநடத்தி வருகின்ற ஓர் கட்டமைப்பாகத் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை விளங்குகின்றது. இந்து இளைஞர்களாலும், அகதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளையும், புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளையும், சமூக மேம்பாட்டுப் பணிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் ஆற்ற முடியும் என்பதை அகில இலங்கையிலும் முதன் முதலில் நிரூபித்துக்காட்டியவர்கள் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரேயாவர்.

## இந்து இளைஞர் மன்றங்களின் பணிகள்

### *மட்டக்களப்பு மாவட்டம்*

1. மட்டக்களப்பில் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் கல்விப் பணிகளையும், அகதிகளுக்கான புனர்வாழ்வுப் பணிகளையும் இந்து கலாசாரப் பணிகளையும் திறம்பட ஆற்றி வருகின்றனர். இந்து வயோதிபர்களுக்காக ஒரு வயோதிபர் இல்லத்தையும் அமைப்பதற்கு முயன்று வருகின்றது.
2. மட்டக்களப்பு கூழாவடியில் கூழாவடி இந்து இளைஞர் மன்றம் அறநெறிப் பாடசாலையை நடத்தியும் ஏழைச் சிறார்களுக்கு கல்விக்கான உதவிக் கொடுப்பனவையும் வழங்கி வருகின்றது.
3. சித்தாண்டி இந்து இளைஞர் மன்றம் ஆலய பரிபாலன சபையினருக்கு உதவியாக இருந்து கூட்டு வழிபாடு மற்றும் இந்து சமய எழுச்சிப் பணிகளை ஆற்றி வருகின்றது. இம்மன்றம் இளம் சைவ மாணவ மன்றத்தோடு இணைந்து செயற்படுகின்றது.
4. மகிழூரில் மகிழூர் இந்து இளைஞர் மன்றம் ஓர் நூலகத்தை பரிபாலிப்பதுடன் ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்தி வருகின்றது. வருடாந்தம் சமய எழுச்சி விழாவை நடத்துகின்றது.
5. களுதாவளை இந்து இளைஞர் மன்றம் களுதாவளை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கியும் திருஞானசம்பந்தர் குருகுலத்துக்கு அவ்வப்போது உதவி புரிந்தும் வருகின்றது.
6. சந்திவெளியில் மாணிக்கவாசகர் குருகுலத்துக்கு உறுதுணையாகவும், வசதியற்ற மாணவர்களின் கல்விப் பணிகளுக்கும் உதவுவதோடு, ஆலயங்களில் சிரமதானப் பணிகளையும், கூட்டு வழிபாடுகளையும் சந்திவெளி இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முதலைக்குடாவில் சமய அறிவுப் போட்டிகளை நடத்துவதோடு ஏழை மாணவர்களின் கல்விப் பணிக்கும் தம்மாலான பங்களிப்பை முதலைக்குடா இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

8. கிரானில் இளைஞர் நலன்பேண் நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்வதோடு இந்து சமய கலாசார மறுமலர்ச்சிக்கும் கிரான் இந்து இளைஞர் மன்றம் உழைத்து வருகின்றது.

9. அம்பிளாந்துறையில் ஆலய பரிபாலனங்களுக்கு உறுதுணையாக இருப்பதோடு, இளைஞர் தலைமை தகைமைக்கான பங்களிப்பையும் அம்பிளாந்துறை இந்து இளைஞர் மன்றம் அளித்து வருகின்றது.

10. ஒந்தாச்சிமடத்தில் சமய அறிவுப் போட்டிகள், ஆலயங்களில் கூட்டு வழிபாடு, சிரமதானப் பணிகள் என்பனவற்றை ஒந்தாச்சிமடம் இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

11. குருமண்வெளியில் இணைப்பான தன்மை பேணப்படாததால் இந்து இளைஞர் மன்றம் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது.

12. வாழைச்சேனையில் சுயதொழில் வாய்ப்பிற்காக இளைஞர்களுக்கு மேசன் பயிற்சியையும், அகதிகளுக்கான உடனடி நிவாரணப் பணிகளையும், மாணவர்களுக்கான கல்விப் பணிகளையும் வாழைச்சேனை இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

13. மீராவோடையில் பாடசாலை மாணவர்களுக்கு உதவுவதோடு ஏழைச்சிறார்களின் நலனுக்கு உதவுவதிலும், ஆலயப் பணிகளிலும் மீராவோடை இந்து இளைஞர் மன்றம் முன்னின்று செயற்படுகின்றது.

14. கதிரவெளியில் இளைஞர்களுக்கான சுயதொழில் வாய்ப்பிற்கான மேசன் பயிற்சியையும், மாணவர்களுக்கான கல்வி முயற்சிகளுக்கான ஆதரவையும் கதிரவெளி இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

15. களுவன்கேணியில் சுயதொழில் வாய்ப்பிற்கான தொழிற் பயிற்சிகளையும் கலாசார முன்னேற்றத்திற்கான மறுமலர்ச்சிப் பணிகளையும் களுவன்கேணி இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

16. கிரான்குளத்தில் சமய அறிவுப் போட்டிகளை நடத்துவதோடு, அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப இயன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளை கிரான்குளம் இந்து இளைஞர் மன்றம் ஆற்றிவருகின்றது.

17. புதுக்குடியிருப்பில் தொழிற் பயிற்சிகள், ஏழைச் சிறார்களுக்கு உடுதுணிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்குதல், சைவ ஆலயங்களில் நற்சிந்தனை வழங்குதல் போன்ற பணிகளை புதுக்குடியிருப்பு இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

18. வாகரையில் அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப வாகரை இந்து இளைஞர் மன்றம் மாணவர்களுக்கான கல்விப் பணிகளையும், அகதிகளுக்கான நிவாரணப் பணிகளையும் ஆற்றி வருகின்றது.

19. திருப்பழுகாமத்தில் திலகவதியார் இல்லத்திற்கு அவ்வப்போது உதவியும் விபுலானந்தர் குருகுலத்திற்கு இயன்ற பங்களிப்பை நல்கியும் கிராமத்தின் சமயப் பணிகளுக்கு உறுதுணையாகவும் திருப்பழுகாமம் இந்து இளைஞர் மன்றம் செயற்பட்டு வருகின்றது.

20. கொம்மாதுறையில் மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டிகளை நடத்துவதோடு இளைஞர் தலைமை தகைமையை இந்து இளைஞர்களிடையே அறிமுகப்படுத்தி ஊக்குவிப்பதிலும் கொம்மாந்துறை இந்து இளைஞர் மன்றம் செயற்பட்டு வருகின்றது.

## மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவருகின்ற 102 இந்து இளைஞர் மன்றங்களையும் ஒருங்கிணைத்து வழிநடத்தி வருகின்ற ஓர் அமைப்பாக மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை இயங்கி வருகின்றது. அகதிகளுக்கான புனர்வாழ்வுப் பணிகள், மாணவர்களுக்கான கல்விப் பணிகள், நூலகப் பணிகள் என்பவற்றை சிறப்பான முறையிலேயே இவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து இளைஞர் மன்றங்களின் பணிகள்

## அம்பாறை மாவட்டம்

1. கல்முனை சேனைக் குடியிருப்பில் அறநெறிப் பாடசாலையைச் சிறப்பாக நடத்துவதோடு ஆலயப் பணிகள், சிரமதானப் பணிகளில் சேனைக் குடியிருப்பு இந்து இளைஞர் மன்றம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றது.
2. கல்முனை நற்பட்டிமுனையில் அறநெறிப் பாடசாலையை நடத்தி வருவதோடு ஆலயங்களில் கூட்டு வழிபாடு, சிரமதானம், போன்றவற்றை மேற்கொண்டு வருவதுடன் நாயன்மார்கள் குருபூசைகள் மற்றும் சமய விடயங்களைக் கைக் கொள்வதுடன் கந்தப்புராணம் நூலையும் கல்லச்சில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர் நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றத்தினர்.
3. பாண்டிருப்பு 01இல், இந்து இளைஞர் மன்றம் ஆத்மிகப் பணிகளுடன் ஆலயங்களில் கூட்டு வழிபாட்டையும், சிரமதானங்களையும் முறையாகச் செயற்படுத்தி வருகின்றது.
4. பாண்டிருப்பு 02இல், இந்து இளைஞர் மன்றம் அவ்வப் போதுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப இந்து மக்களின் நலன் பேணும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.
5. அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றம் விபுலானந்த மாணவர் இல்லத்திற்கு உதவுவதோடு ஆலயங்களின் எழுச்சிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் இயன்ற பங்களிப்பை நல்கி வருகின்றது.
6. கல்முனை ஐயனார் கோயில் வீதியில் செயற்பட்டுவரும் இந்து இளைஞர் மன்றம் தமக்கே உரித்தான இயலுமான சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.
7. தம்பட்டை இந்து இளைஞர் மன்றம் குருகுல வளர்ச்சிக்கும் இந்து மத எழுச்சிக்கும் இயன்ற பணியை ஆற்றி வருகின்றது.
8. கல்முனை உடையார் வீதியில் இயங்கி வருகின்ற கல்முனை இந்து இளைஞர் மன்றம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆளுமை, சமுதாய மேம்பாடு என்பவற்றில் ஈடுபட்டு உழைத்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கல்முனை 03 இல் உள்ள இந்து இளைஞர் மன்றம் சிரமதானம், கூட்டுவழிபாடு, இணைப்புத் தன்மை என்பவற்றில் நாட்டம் கொண்டு நற்பணி புரிகின்றது.

10. காரைதீவு இந்து இளைஞர் மன்றம் காலத்தின் கோலத்தில் இயக்கமற்ற நிலையில் இருக்கின்றது.

11. அக்கரைப்பற்று 08இல் உள்ள இந்து இளைஞர் மன்றம் சமூக முனைப்புடன் உழைத்து வருகின்றது.

12. இலங்கை இந்து இளைஞர் பேரவையின் நீண்ட கால உறுப்புரிமை மன்றமாக உள்ள கோமாரி இந்து இளைஞர் மன்றம் மக்களின் துயர்துடைப்பு நிவாரண விடயங்களில் நாட்டம் செலுத்துகின்றது.

13. ஆலையடிவேம்பு இந்து இளைஞர் மன்றம் சமூகப் பயிற்சிக்கான முயற்சிகளில் நாட்டம் கொண்டு விளங்குகின்றது.

14. பொத்துவில் இந்து இளைஞர் மன்றம் ஆலய வழிபாடு, கூட்டு வழிபாடு, சிரமதானம் என்பவற்றில் விருப்புடன் பணியாற்றுகின்றது.

15. கோளாவில் இந்து இளைஞர் மன்றம் அறநெறிப் பாடசாலையை நடத்துவதோடு மாணவர்களின் கல்விப் பணிக்கு உதவ முயன்று வருகின்றது.

16. விநாயகபுரத்தில் இந்து இளைஞர் மன்றம் நெருக்கடியான நிலைமைகளிற் காலத்துக்கேற்ப இயன்றளவு பணியாற்றுகின்றது.

17. நாவற்காடு இந்து இளைஞர் மன்றம் வன்செயல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நோக்கம் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

18. நாவிதன்வெளியில் ஆலய வளர்ச்சிக்கும் தொழில் முயற்சிக்கும் நாவிதன்வெளி இந்து இளைஞர் மன்றம் ஆலோசித்து வருகின்றது.

19. கல்முனை மத்திய முகாமில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்குடன் மத்திய முகாம் இந்து இளைஞர் மன்றம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

20. வளத்தாப்பிட்டி இந்து இளைஞர் மன்றம் மாணவர்களுக்கு கல்விப் பணியும் கிராமத்தில் மக்களுக்கு அவ்வப்போது தேவையான ஆலோசனைகளையும் அளித்து வருகின்றது.

21. பெரியநீலாவணையில் இந்து இளைஞர் மன்றம் வாசிகசாலை நடத்தி வருவதோடு மரணிக்கும் வறியவர்களுக்கு உதவுதல், மாணவர்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியோக வகுப்புக்கள் நடத்துதல், திருவிழாக் காலங்களில் சமய அறிவுப் போட்டிகள், சமயச் சொற்பொழிவுகளை நடத்துவதோடு, ஆலயங்களிலும் பொது இடங்களிலும் சிரமதானப் பணிகளையும் சீரிய முறையில் ஆற்றி வருகின்றனர்.

## அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் பேரவை

அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற 25 இந்து இளைஞர் மன்றங்களையும் ஒருங்கிணைத்து வழிநடத்தி வருகின்ற ஓர் கூட்டமைப்பாக அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் பேரவை விளங்குகின்றது. இப்பேரவையினர் அகதிகள் பணியிலும் இந்து கலாசாரப் பணிகளிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

# இந்து இளைஞர் மன்றங்களின் பணிகள்

## ஏனைய மாவட்டங்கள்

1. கொழும்பில் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் அவ்வப்போது இலக்கிய விழாக்களையும் சமயச் சுற்றுலாக்களையும் மேற்கொண்டு வருகின்றது.
2. வடகொழும்பு இந்து இளைஞர் மன்றம் கொழும்பு முகத்துவாரப் பகுதிகளிலும் சுற்றுப் பகுதிகளிலும் அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதோடு வில்லிசை போன்ற கலை இசைத்துறைகளிலும் இளைஞர்களின் ஆளுமையைப் பேணி வருகின்றது.
3. நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் மிகப் பெரிய கலாசார மண்டபத்தைக் கொண்டு விளங்குவதுடன் மேற்குக் கரையோரப் பிராந்தியத்தில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.
4. சிலாபத்தில் சிலாபம் இந்து இளைஞர் மன்றம் அருள்மிகு முன்னேஸ்வர ஆலயத்தில் தீர்த்தத் திருவிழாவை நடத்துவதற்கு உதவுவதோடு இந்து சமய மறுமலர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புத்தளத்தில் அறநெறிப் பாடசாலையை நடத்திவருவதுடன் ஆலயப் பணிகளிலும் கூட்டு வழிபாட்டிலும் புத்தளம் இந்து இளைஞர் மன்றம் ஈடுபட்டு வருகின்றது.

6. புத்தளம் தில்லையடி இந்து இளைஞர் மன்றம் அறநெறிப் பாடசாலையை நிர்வகிப்பதுடன் ஆலயத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் உதவி வழங்குகின்றது.

7. முந்தலில் முந்தல் இந்து இளைஞர் மன்றம் ஆலய வழிபாடுகளுக்கு உதவியும் உந்துதலும் அளித்து வருகின்றது.

8. கண்டி இந்து இளைஞர் மன்றம் அறநெறிப் பாடசாலையினைச் சிறப்பாக நடத்தி வருவதோடு வருடாந்தம் கலை விழாவையும் சகல மதத்தினரும் கலந்து கொள்ளும் விழாவாகச் செய்து வருகின்றது.

9. கலகா இந்து இளைஞர் மன்றம் பாடசாலை மாணவர்களின் கல்விப்பணி, சமூகப் பணி என்பவற்றில் அக்கறையுடன் உழைத்து வருகின்றமை பாராட்டத்தக்கது.

10. கடுகண்ணாவை இந்து இளைஞர் மன்றம் அறநெறிப் பாடசாலைகளில் அக்கறையுடன் ஈடுபட்டு பணியாற்றி வருகின்றது.

11. கம்பளை இந்து இளைஞர் மன்றம் சிவராத்திரி, நவராத்திரி, மற்றும் சமய நிகழ்ச்சிகளைக் கச்சிதமாக நிறைவேற்றி வருகின்றது.

12. பண்டாரவளை இந்து இளைஞர் மன்றம் கதிர்காம யாத்திரிகர்களுக்கான விசேட சேவைகளையும் மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டிகளையும் சிறப்புடன் நடத்தி வருகின்றது.

13. ஹட்டனில் ஹட்டன் இந்து இளைஞர் மன்றம் ஆன்மிக விழிப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றது.

14. வவுனியாவில் சிறப்பான கலாசார மண்டபத்தையும் பிரயாணிகள் தங்கும் மண்டபத்தையும் சிறப்புற பரிபாலித்து நடத்துவதோடு பாலர் பாடசாலை ஒன்றையும் வவுனியா இந்து இளைஞர் மன்றம் நிர்வகித்து வருகின்றது.

15. நெடுங்கேணியில் நெடுங்கேணி இந்து இளைஞர் மன்றம் விவசாய நடவடிக்கைகளில் முன்னின்று அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

16. கிளிநொச்சி உதயநகர் இந்து இளைஞர் மன்றம் மக்களுக்கான மறுமலர்ச்சிப் பணிகளிலும் ஆலய சிரமதானங்களிலும் உழைத்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இந்து இளைஞர் மன்றம் அகதிகளுக்கான பணிகளிலும் கிராமிய நலன்புரிப் பணிகளிலும் முன்னோடியாகச் செயலாற்றி வருகின்றது.

18. மன்னாரில் இந்து இளைஞர் மன்றம் முன்னர் செயற்பட்டு வந்தது. தற்போதைய சூழ்நிலையில் தொடர்புகளின்றி உள்ளது.

வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் இந்து மதம்

பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் நிறுவப்பட்ட மதங்கள். அவற்றைத் தோற்றுவித்தவர்கள் யார்? அவை தோன்றிய காலம் எது என்பவை நமக்குத் தெரியும். ஆனால் எமது இந்து மதம் தோன்றிய காலமோ, தோற்றுவித்தவர் யார் என்பதோ நமக்குத் தெரியாது. இதுவே நமது மதத்திற்குள்ள பெருமை.

எமது மதத்தை இந்து மதம், அல்லது இந்து சமயம் என்று அழைக்கின்றோம். ஆனால் நமது மதத்தின் உண்மையான புராதனப் பெயர் சனாதன தர்மம் - வைதிக மதம் என்பதே. "தொன்மைச் சிறப்பு வாய்ந்தது" "இறைவனால் மக்களுக்கு உணர்த்தப்பெற்றது" என்பது பொருள்! எமது சமயம் தோன்றிய காலமும், தோற்றுவித்தவர் யார் என்பதும் தெரியாமையினால் அதனை, இறைவன் மனித இனத்திற்கு அருளிய ஒரு வழிகாட்டி நெறியாகக் கருதுகின்றோம்.

மத உணர்வு வாழ்க்கையின் பல அம்சங்களில் ஒன்று என்று மேலை நாட்டினர் கருதுகின்றனர். ஆனால் நமது இறையடியார்கள் சமயமே வாழ்வின் முழுமை என்று உபதேசித்துள்ளனர். பிற மதங்கள் போல் அல்லாது நமது மதம் வழிபாட்டு முறையிலும் கொள்கைகளிலும் சுதந்திரம் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடு சிறப்புற வாழ்த்துகின்றோம்..

**உதயன் பதிப்பகம்**

39, அருணகிரி வீதி,
திருக்கோணமலை

☎ 026-20783


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முத்துவிநாயகர் துணை

# K.K.NITHY TRADERS

General Merchants & Commission Agents

**No.250, 252, Central Road,**

**Trincomalee.**

**T.P. 026-20847**

Head Office: Colombo

**MAHAAWELI STORES**

96, Old Moor Street,
Colombo 12.
T.P.435019, 321669
Fax: 337846

Colombo

**K.K.NITHY TRANSPORTERS**

(Trincomalee - Colombo)
Transport Operators,
L.G.112, People's Park,
Colombo 12.
T.P. 074-712479

*With Best Compliments from*

# EASTERN LANKA ENTERPRISE

Dealers in Motor Spares & Accessories

Importers of Maruti Gypsy, H.M.T.Tractors

Mahindra and T.V.S.Super Champ & Spares.

**Authorised Stockist for Suzuki Motors Lanka Ltd.**

**T.V.S. Champ Moped and TVS 50 XL.**

63, Main Street, Trincomalee

☎ 026-20210



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய நாட்டுத் தூதுவர் உயர்திரு.நரேஸ்வரதயாள் அவர்களிடமிருந்து பேரவைக்கான அன்பளிப்பாகத் தமிழ் தட்டச்சுப்பொறியைத் தலைமைச் செயலாளர் பெற்றுக் கொள்ளுதல் (1995 ஆனி)




பேரவையால் நடத்தப்பெற்ற செயற்திட்டத் தயாரிப்பும் அதன் முகாமைத்துவமும் என்ற அபிவிருத்திப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்த கொழும்பு இராமகிருஸ்ண சங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி மகராஜ் அவர்கள் வரவேற்கப்படுகின்றார். (1996 புரட்டாதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து இளைஞர் மாநாடு சிறக்க வாழ்த்துக்கள்..

**சகல விதமான கட்டிடப் பொருட்கள்,**
**மின் உபகரணங்கள், பெயின்ற் வகைகள்,**
**நீர் இறைக்கும் இயந்திரம், L.P.Gas**
**ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள..**

***நியூ கோபாலன் கம்பனி***

28, கடல்முக வீதி,
திருக்கோணமலை.

தொலைபேசி: 22619 பக்ஸ்: 22407

எமது நல்வாழ்த்துக்கள்..

***பொலிகை ரேட் சென்றர்***

எம்மிடம் நம்பகமான உயர்தர சுத்தமான
நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்
சகல தரத்திலான அரிசி,
மளிகைப் பொருட்கள் மற்றும்
சாய்ப்புச் சாமான்கள்
சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

209-A, மத்திய வீதி, திருக்கோணமலை ☎ 026-21057
கிளை: 398, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை ☎ 026-21951

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DOLLAR AGENCIES

**General Merchant's Wholesale &**

**Retail Dealers, Commission Agents**

**& Govt. Transporters**

Trincomalee Office:

**78-80, Main Street,**
**Trincomalee.**
**T.P: 22533 Fax:21376**

Colombo:

**89, Peoples Park,**
**Colombo 11.**
**T.P: 01-433505**

**With Best Compliments from**

# NEW NIRUSHA ELECTRICAL

**Authorised Dealers In All Kind Of Electrical Goods**

**Wholesale & Retail Hardware Items**

**Condute Pipes, PVC Pipes, Fittings & Cables Gas Cooker Cylinder**

☎ **026-22868**
**026-21655**

46, Sea View Road,
Trincomalee.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இலங்கை இந்து இளைஞர் பேரவையின்

12வது, தேசிய இந்து இளைஞர் மாநாட்டிற்கு

சகல விதத்திலும்

உதவிய அனைவருக்கும்

மாநாட்டின் சிறப்பு மலருக்கும்

ஆசிச் செய்திகளையும்

கட்டுரைகளையும் வழங்கிய

அருளாளர்களுக்கும் பெரியோர்களுக்கும்

மலருக்கான

விளம்பரங்களைத் தந்துதவியோர்களுக்கும்

மாநாட்டிற்காகப் பங்களிப்புச் செய்த

அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்

இம்மலரைச் சிறப்புற

ஆக்கித்தந்த உதயன் பதிப்பகத்தாருக்கும்

எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

வ.முருகப்பன்
**தலைவர்.**

"சிவஞானச் செல்வர்"
செ.சிவபாதசுந்தரம்
**தலைமைச் செயலாளர்.**

சு.தில்லைநாதர்
**நிதிச்செயலாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து இளைஞர் மாநாடு சிறக்க

கொழும்பு மயூரபதி

# அருள்மிகு பத்திரகாளி அம்பாள்

தேவஸ்தானத்தின்

**நல்வாழ்த்துக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இலங்கையின் பல பாகங்களிலும்

இந்து இளைஞர்களின்

சமய, சமூகப் பணிகளை

முன்னெடுத்துச் செல்லும்

இளைஞர்களின் அமைப்பே

**இலங்கை இந்து இளைஞர் பேரவை ஆகும்.**

இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org